

# தொழிலாள வர்க்கம், முதலாளித்துவ காட்டுமிராண்டித்தனத்திற்கு எதிரான போராட்டம் மற்றும் சோசலிசப் புரட்சிக்கான உலகக் கட்சியைக் கட்டியெழுப்புதல்



WSWS

2024 புத்தாண்டுக்கான உலக சோசலிச வலைத் தள சர்வதேச ஆசிரியர் குழுவின் அறிக்கை

# தொழிலாள வர்க்கம், முதலாளித்துவ காட்டுமிராண்டித்தனத்திற்கு எதிரான போராட்டம், மற்றும் சோசலிசப் புரட்சிக்கான உலகக் கட்சியைக் கட்டியெழுப்புதல்

உலக சோசலிச வலைத் தள
சர்வதேச ஆசிரியர் குழுவின் அறிக்கை

*4 ஜனவரி 2024*

தொழிலாள வர்க்கம், முதலாளித்துவ காட்டுமிராண்டித்தனத்திற்கு எதிரான போராட்டம், மற்றும் சோசலிசப் புரட்சிக்கான உலகக் கட்சியைக் கட்டியெழுப்புதல்

முதற் பதிப்பு

வெளியீடு: **wsws.org/ta**

# பொருளடக்கம்

**பகுதி - 1**

உலக சோசலிச வலைத்தள சர்வதேச ஆசிரியர் குழுவின் அறிக்கை **5**

**பகுதி - 2**

கோவிட்-19 பெருந்தொற்று நோய் மற்றும் வெகுஜன இறப்புக்களையும் துயரங்களையும் இயல்பாக்குதல் 19

'என்றென்றும் கோவிட்' கொள்கையின் பரிணாமம் 23

2024 இல் பூகோளரீதியாக ஒழித்தலுக்கான போராட்டம் 29

**பகுதி - 3**

அதிதீவிர வலதுகளின் எழுச்சியும் ஜனநாயகத்தின் உலகளாவிய உடைவும் 36

தன்னலக்குழு மற்றும் சமூக சமத்துவமின்மை 39

அமெரிக்க ஜனநாயகத்தின் நெருக்கடியும் மற்றும் 2024 தேர்தல்களும் 46

சோசலிசம் எதிர் முதலாளித்துவம் மற்றும் தன்னலக்குழு 51

**பகுதி - 4**

வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சியும் சோசலிசத்திற்கான போராட்டமும் 54

# பகுதி - 1

## உலக சோசலிச வலைத் தள சர்வதேச ஆசிரியர் குழுவின் அறிக்கை

1. 2024 புத்தாண்டானது தீவிரமடைந்து வரும் சர்வதேச நெருக்கடி நிலைமைகளின் கீழ் தொடங்குகிறது. 21 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், அமெரிக்காவின் நல்லெண்ணம் மற்றும் ''ஒற்றைத் துருவ'' ஆட்சியின் கீழ், உலக முதலாளித்துவம், உலகளாவிய அமைதி மற்றும் செழிப்பின் ஒரு புதிய சகாப்தத்திற்குள் நுழைகிறது என்று நம்பிக்கையான கணிப்புகள் இருந்தன. சோவியத் ஒன்றியத்தின் கலைப்புடன், ''குறுகிய இருபதாம் நூற்றாண்டின்'' பிசாசுகள் எனப்பட்டவையான அதாவது எல்லாவற்றுக்கும் மேலாக, மார்க்சியம் மற்றும் சோசலிசப் புரட்சியின் பேயுருக்கள் நிரந்தரமாக புதைக்கப்பட்டன. வோல் ஸ்ட்ரீட் உலகை நோக்கிக் கூக்குரலிட்டது: அதாவது ''எனது பெயர் முதலாளித்துவம், ராஜாக்களின் ராஜா, எனது சாதனைகளைப் பாருங்கள், வலிமையானவர்களே, பிரமித்துப் போங்கள்!" ஆனால் அந்த ஆணவப் பெருமிதத்தை ஒரு மாபெரும் சிதைவில் கரைப்பதற்கு கால் நூற்றாண்டுக்கும் குறைவான காலமே ஆனது. வெற்றிகரமான முதலாளித்துவத்தின் புதிய நூற்றாண்டு எல்லாவற்றிலும் குறுகியது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. இருபதாம் நூற்றாண்டின் போர்கள் மற்றும் புரட்சிகளை உருவாக்கிய உலக முதலாளித்துவ அமைப்புமுறையின் அடிப்படை முரண்பாடுகள் தீர்க்கப்படவில்லை மற்றும் உலகெங்கிலும் பரவி வரும் தீவிரமடைந்து வரும் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் எழுச்சிகளின் உந்து சக்திகளாக உள்ளன.

2. கடந்த நூற்றாண்டின் பேரழிவுகளால் ஏற்பட்ட பயங்கரங்கள் மீண்டும் அரங்கேறி வருகின்றன. இனப்படுகொலை என்பது அரச கொள்கையின் ஒரு கருவியாக பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. காஸாவில் பாலஸ்தீனிய மக்களை அழிப்பதற்கான இஸ்ரேலிய ஆட்சியின் முயற்சி, அமெரிக்கா மற்றும் அதன் ஏகாதிபத்திய கூட்டணிகளின் வெளிப்படையான ஒப்புதலுடன் தொடர்கிறது, அவைகள் போர்நிறுத்தத்திற்கு தங்கள் எதிர்ப்பை

மீண்டும் மீண்டும் பிரகடனம் செய்துள்ளன. அடர்த்தியான மக்கள்தொகை கொண்ட நகர்ப்புறப் பகுதி இரக்கமற்ற குண்டுவீச்சுக்கு உட்படுத்தப்படுகிறது, இது போரின் முதல் 10 வாரங்களுக்குள் 25,000 க்கும் மேற்பட்ட மக்களைக் கொன்றுள்ளது, அவர்கள் பெரும்பாலும் பெண்களும் மற்றும் குழந்தைகளும் ஆவார்கள்.

3. இஸ்ரேலின் பாசிச பிரதம மந்திரி பெஞ்சமின் நெதன்யாகு தனது புத்தாண்டுச் செய்தியில், தாக்குதல் 2024 முழுவதும் தொடரும் என்று அறிவித்தார். அமெரிக்கா மற்றும் அதன் நேட்டோ சக குற்றவாளிகளின் வரம்பற்ற நிதி மற்றும் இராணுவ ஆதரவு இல்லாமல், இஸ்ரேல் இன்னும் ஒரு வாரம், ஒரு வருடம் இதை குறிப்பிட வேண்டிய அவசியமில்லை, போரைத் தொடர முடியாது. அமெரிக்க ஜனாதிபதி, வெளிவிவகாரச் செயலாளர், எண்ணற்ற ஏனைய உயர் அரசாங்க அதிகாரிகள் மற்றும் பென்டகனின் உயர்மட்ட அதிகாரிகள் ஆகியோர் வாஷிங்டனுக்கும் டெல் அவிவிற்கும் இடையில் முன்னும் பின்னுமாக பயணித்து, இஸ்ரேலிய நடவடிக்கைகளை மேற்பார்வையிட்டு, குண்டுவீச்சு இலக்குகளைத் தேர்ந்தெடுப்பதில் பங்கெடுத்தனர். அமெரிக்க மற்றும் நேட்டோ படைகள் காஸாவிற்குள் களத்தில் கொலைகார நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபட்டுள்ளனர் என்பது பகிரங்கமான இரகசியமாகும்.



காஸா பகுதியில் ரஃபாவிலுள்ள மனித புதைகுழியில் இஸ்ரேலால் கொல்லப்பட்ட பாலஸ்தீனியர்களின் உடல்களை புல்டோசர் செவ்வாய்க்கிழமை, டிசம்பர் 26, 2023 அன்று இறக்குகிறது. [AP Photo/Fatima Shbair]

4. ஏகாதிபத்திய சக்திகள் தமது மனித உரிமை மீறல்களை வழமையாக மீறுவதை விட இனப்படுகொலைக்கு அனுமதியளித்தல் மற்றும் பங்கெடுத்தல் என்பவற்றையே பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. காஸா இனப்படுகொலையானது, ஒரு நூற்றாண்டுக்கு முன்னர், முதலாம் உலகப் போரின் மத்தியில் லெனினால் முதன்முதலில் அடையாளம் காணப்பட்ட ஒரு போக்கை உயர்ந்த மட்டத்தில் உறுதிப்படுத்துகிறது. அவர் 1916 இல் பின்வருமாறு எழுதினார், “ஜனநாயக-குடியரசுவாதிகளுக்கும் மற்றும் பிற்போக்கு-முடியாட்சி ஏகாதிபத்திய பூர்சுவா வர்க்கத்திற்கும் இடையிலான வேறுபாடு அழிக்கப்படுகிறது, ஏனெனில் அவைகள் இரண்டும் உயிருடன் அழுகிக் கொண்டிருக்கின்றன...” “பிற்போக்கு-முடியாட்சிவாதிகளுக்கு’’ “பாசிசம்’’ என்ற சொல்லை பதிலீடு செய்வதும் லெனினின் பகுப்பாய்வும், தற்போதைய ஏகாதிபத்திய ஆட்சிகளைக் குறித்து விளக்குவதற்கு முற்றிலும் செல்லுபடியாகுவதாக இருக்கிறது.

5. காஸா இனப்படுகொலையானது ஒரு தனித்துவமான அத்தியாயம் அல்ல. அது இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலுடன் தொடர்புடைய விதிவிலக்கான நிலைமைகளின் விளைவு எனவும், சியோனிச திட்டத்தின் உள்ளார்ந்த பிற்போக்கு தன்மையினதும் அதன் இனவாத மற்றும் வெளிநாட்டவர் விரோத-தேசியவாத நம்பிக்கைகளில் மூழ்கியுள்ள அதன் சித்தாந்தத்தின் விளைவு எனவும் மிகவும் நன்கு புரிந்து கொள்ளப்படுகிறது. பிந்தைய கூறுகள் நிச்சயமாக, இஸ்ரேலிய ஆட்சியின் நடவடிக்கைகளில் ஒரு குறிப்பிடத்தக்க பாத்திரத்தை வகிக்கின்றன. ஆனால், அதன் ஏகாதிபத்திய நிதியாளர்கள் மற்றும் ஆயுத விநியோகஸ்தர்களின் முழு ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் தற்போதைய போரின் கட்டுப்பாடற்ற மூர்க்கத்தனத்தை, உலக ஏகாதிபத்திய மற்றும் தேசிய-அரசு அமைப்புமுறையின் முறிவின் பின்னணியில் மட்டுமே புரிந்து கொள்ளவும் தெளிவுபடுத்தவும் முடியும்.

6. சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்ட பின்னர் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மூலோபாயவாதிகளின் அடிப்படைத் ‘‘தவறு’’ என்னவென்றால், இந்த நிகழ்வு முற்றிலும் கருத்தியல் சொற்களில், அதாவது சோசலிசத்தின் மீதான முதலாளித்துவத்தின் வெற்றி என்று விளக்கப்பட்டது. ஆனால் ஸ்ராலினிசத்தை சோசலிசத்துடன் தவறாக அடையாளப்படுத்துவதை அடிப்படையாகக் கொண்ட இந்த

விளக்கமானது, சோவியத் ஒன்றியத்தின் உடைவுக்கான உண்மையான காரணத்தையும் அமெரிக்க மற்றும் உலக ஏகாதிபத்தியத்தின் எதிர்கால வளர்ச்சியில் அதன் தாக்கங்களையும் மறைத்தது.

7. அதன் துயரகரமான விளைவுகள் இருந்தபோதிலும், சோவியத் ஒன்றியத்தின் கலைப்பானது ஸ்ராலினிச கொள்கையான ‘‘தனி ஒரு நாட்டில் சோசலிசம்’’ குறித்த இன்றியமையாத மார்க்சிச-ட்ரொட்ஸ்கிச விமர்சனத்தை உறுதிப்படுத்தியது. ஒரு தனிமைப்படுத்தப்பட்ட சோசலிச அரசு என்ற பிற்போக்கு தேசியவாத கற்பனையானது, ட்ரொட்ஸ்கி முன்கணித்ததைப் போல, உலகப் பொருளாதாரத்தின் யதார்த்தத்திற்கு பலியானது.

8. சோவியத் ஒன்றியத்தின் முடிவானது அமெரிக்காவுக்கு அதன் போட்டியாளர்களை விட ஒரு குறுகிய கால அனுகூலத்தை வழங்கியது, அதை அதன் பிரச்சாரகர்கள் ‘‘ஒற்றை துருவ தருணம்’’ (“unipolar moment”) என்று அழைத்தனர். ஆனால் இருபதாம் நூற்றாண்டின் இரண்டு உலகப் போர்களுக்கு இட்டுச் சென்ற அடிப்படை முரண்பாடான மிகவும் ஒருங்கிணைந்த உலகப் பொருளாதாரத்தின் புறநிலை யதார்த்தத்திற்கும் காலாவதியான தேசிய அரசு அமைப்புமுறையின் நிலைப்புத்தன்மைக்கும் இடையிலான மோதலானது கிழக்கு ஐரோப்பாவில் சோவியத் ஒன்றியம் மற்றும் அதன் துணை ஆட்சிகளின் வீழ்ச்சியால் தீர்க்கப்படவில்லை.

9. நாஜி ஜேர்மனியின் தோல்வியில் சோவியத் ஒன்றியம் வகித்த தீர்க்கமான பாத்திரம் மற்றும் இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய காலனித்துவ எதிர்ப்பு வெகுஜன இயக்கங்களின் அலையின் விளைவாக, இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய உலகளாவிய மேலாதிக்கத்தை அடைய அமெரிக்கா தனது புவிசார் அரசியல் அனுகூலத்தைப் பயன்படுத்திக் கொள்ள முயன்றது. வாஷிங்டன் இறுதியாக தனது இராணுவ பலத்தின் மூலம் உலகப் பொருளாதாரத்தை தனது கட்டுப்பாட்டின் கீழ் மறுசீரமைக்க முடியும் என்று நம்பியது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அபிமான பண்டிதரான நியூயோர்க் டைம்ஸின் தாமஸ் ஃப்ரீட்மன், “சிலிக்கன் பள்ளத்தாக்கின் தொழில்நுட்பங்களுக்காக, உலகை பாதுகாப்பாக வைத்திருக்கக்கூடிய மறைந்திருக்கும் முஷ்டியே, அமெரிக்க இராணுவம், விமானப்படை, கடற்படை மற்றும்

படையெடுப்பு சிறப்புப் படைகள் (Marine Corps) என்று அழைக்கப்படுகிறது...” என்று 1999 இல் பிரகடனம் செய்தார்.



மார்ச் 21, 2003 ஆண்டு வெளிவந்த இந்தக் கோப்புப் படத்தில், அமெரிக்க தலைமையிலான படைகள் ஈராக்கின் பாக்தாத் மீது கடுமையான குண்டுவீச்சின் போது ஒரு அரசாங்க கட்டிடம் எரிக்கப்படுகிறது. [AP Photo/Jerome Delay]

10. பால்கன்கள், மத்திய கிழக்கு மற்றும் மத்திய ஆசியாவில் அமெரிக்காவால் தொடங்கப்பட்ட முடிவற்ற தொடர்ச்சியான போர்கள், அதன் ஒட்டுமொத்த பொருளாதார சரிவு இருந்தபோதிலும், இராணுவ நடவடிக்கைகள் மூலம் அதன் மேலாதிக்க நிலையைத் தக்கவைத்துக் கொள்வதற்கான ஒரு தீவிர முயற்சியாகும். அனைத்துலகக் குழுவானது 2003 ஈராக் மீதான படையெடுப்பிற்கான உந்துதலை விளக்கியதுடன், அதன் அடித்தள மேலாதிக்கத் திட்டத்தின் தோல்வியை இவ்வாறு முன்னறிவித்தது:

> ஈராக்கிற்கு எதிரான ஒரு ஆக்கிரோஷமான போரை ஆரம்பிப்பது, ஏகாதிபத்தியத்தின் அடிப்படையில், உற்பத்தி சக்திகளின் உலகளாவிய தன்மைக்கும் காலாவதியான தேசிய-அரசு அமைப்புமுறைக்கும் இடையிலான முரண்பாட்டின் உலக வரலாற்றுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு இறுதியான, தீவிரமான முயற்சியை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. உலகின் தலைவிதியின் இறுதி நடுவராகச் செயல்பட்டு, மாபெரும் பங்கை தனக்காகக் கைப்பற்றிய பிறகு, உலகின் வளங்கள் எவ்வாறு ஒதுக்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதன் மூலம், அமெரிக்கா

தன்னை ஒரு அதிஉயர் தேசிய-அரசாக நிறுவுவதன் மூலம் பிரச்சினையை வெற்றிகொள்ள முன்மொழிகிறது. ஆனால் 1914ல் முற்றிலும் பிற்போக்கு உலக முதலாளித்துவத்தின் அடிப்படை முரண்பாடுகளுக்கான இந்த வகையான ஏகாதிபத்திய தீர்வு எதுவும் காலப்போக்கில் முன்னேற்றத்தைக் காட்டவில்லை. உண்மையில், இருபதாம் நூற்றாண்டின் போக்கில் உலகப் பொருளாதார வளர்ச்சியின் அபரிமிதமான அளவு அத்தகைய ஏகாதிபத்தியத் திட்டத்திற்கு பைத்தியக்காரத்தனமான ஒரு அம்சத்தை வழங்குகிறது. ஒரு தேசிய அரசின் மேலாதிக்கத்தை ஸ்தாபிப்பதற்கான எந்தவொரு முயற்சியும் சர்வதேச பொருளாதார ஒருங்கிணைப்பின் அசாதாரண மட்டத்துடன் பொருந்தாது. அத்தகைய ஒரு திட்டத்தின் ஆழமான பிற்போக்கு தன்மையானது, அதை நிறைவேற்றுவதற்குத் தேவையான காட்டுமிராண்டித்தனமான வழிமுறைகளில் வெளிப்படுத்தப்படுகிறது.

11. வாஷிங்டனின் ‘‘விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்ட’’ ஏகாதிபத்திய ஒழுங்குடன் முரண்படும் சீனா மற்றும் எதிர்க்கும் தேசிய அரசுகளால் தங்கள் மேலாதிக்கத்திற்கு விடுக்கப்பட்ட சவாலை எதிர்கொள்வதில் அமெரிக்காவும் அதன் நேட்டோ கூட்டணிகளும் தங்கள் மேலாதிக்க நிலையைத் தக்கவைத்துக் கொள்ள மேற்கொண்டு வரும் விரக்தியான மற்றும் சவாலான முயற்சியிலிருந்து எழும் ‘‘காட்டுமிராண்டித்தனமான வழிமுறைகளை’’ காஸா இனப்படுகொலை எடுத்துக்காட்டுகிறது. பாலஸ்தீனியர்கள் மீதான படுகொலையானது ரஷ்யாவிற்கு எதிரான இரத்தம் தோய்ந்த அமெரிக்க-நேட்டோ பினாமி போருக்கு மத்தியில் கட்டவிழ்ந்து வருகிறது, இது 2022 பெப்ரவரியில் வெடித்ததில் இருந்து தோராயமாக அரை மில்லியன் உக்ரேனிய மற்றும், குறைந்தபட்சம் 100,000 ரஷ்ய உயிர்களை இழந்துள்ளது.

12. காஸாவில் போரானது இனப்படுகொலையை ஏகாதிபத்திய கொள்கையின் ஏற்றுக்கொள்ளக்கூடிய கருவியாக இயல்பாக்கியுள்ள நிலையில், ரஷ்யாவிற்கு எதிரான அமெரிக்க-நேட்டோ போரின் இடைவிடாத விரிவாக்கமானது, இந்த மோதல் தந்திரோபாய மற்றும் மூலோபாய அணுஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கு வழிவகுக்கும் ஒரு உயர்ந்த மட்டத்திலான

சாத்தியத்தையும், வாய்ப்பையும் கூட நடைமுறையில் ஏற்றுக்கொள்வதுடன் சேர்ந்துள்ளது. பைடென் நிர்வாகம் அடிக்கடி பொருளாதாரத் தடைகளை விதிக்கிறது மற்றும் ரஷ்ய சொத்துக்கள் மற்றும் பிரதேசங்கள் மீது இராணுவத் தாக்குதல்களுக்கு உத்தரவிடுகிறது. அணுஆயுத பதிலடியைத் தூண்டும் அபாயத்தால் பனிப்போரின் போது ஏற்றுக்கொள்ள முடியாததாக இத்தகைய நடவடிக்கைகள் கருதப்பட்டது. “சிவப்புக் கோடுகளை” மீண்டும் மீண்டும் கடக்கும் பைடென் நிர்வாகமும் அதன் கூட்டணி நேட்டோ அரசாங்கங்களும், தாங்கள் மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கைகள் அணுஆயுதப் போர் அச்சுறுத்தலால் கட்டுப்படுத்தப்படாது என்று வலியுறுத்தியுள்ளன.



புதன்கிழமை, ஏப்ரல் 26, 2023 அன்று உக்ரேனின் டோனெட்ஸ்க் பிராந்தியத்திலுள்ள பக்முத்தின் இந்த வான்வழிக் காட்சியில் கட்டிடங்களிலிருந்து புகை எழுகிறது. [AP Photo/Libkos]

13. உக்ரேனுக்கு கடுமையான இழப்பு ஏற்பட்ட போதிலும், அமெரிக்க-நேட்டோ ஏகாதிபத்தியம் இதுவரை போர்க்களத்தில் வெற்றியை அடையத் தவறிவிட்டது. 2023 நடுப்பகுதியில் அதன் “வசந்தகால தாக்குதல்” ஒரு தோல்வியில் முடிந்தது. 2023 ஆம் ஆண்டின் இறுதி நாட்களில், உக்ரேனிய ஆட்சியானது ரஷ்ய மண்ணில் ஏவுகணைத் தாக்குதலைத் தொடங்கி, பெல்கோரோட் நகரில் குறைந்தது 22 பேரைக் கொன்றதன் மூலம் போரின் குறிப்பிடத்தக்க தீவிரத்தை மேற்கொண்டது. உக்ரேன் மீதான ஏவுகணைத் தாக்குதல்களின் ஒரு புதிய அலை மூலம் ரஷ்யா

இதற்கு விடையிறுக்கிறது, பினாமி போருக்கு வரம்பற்ற நிதியைத் தொடர வேண்டும் என்ற அதன் கோரிக்கைகளை வலியுறுத்த பைடென் நிர்வாகம் இதைப் பயன்படுத்துகிறது.

14. இறுதிப் பகுப்பாய்வில், ரஷ்யாவுக்கு எதிரான போரின் அமெரிக்க-நேட்டோ தூண்டுதல், சீனாவிற்கு எதிரான அமெரிக்க தலைமையிலான போரின் ஆரம்ப கட்டங்களைத் தவிர வேறொன்றையும் குறிக்கவில்லை, இது உலகின் ஒவ்வொரு பகுதியையும் ஒரு குறிப்பிட்ட செயல்பாட்டு மண்டலமாக மாற்றுகிறது. ஏறக்குறைய 20 ஆண்டுகளுக்கு முன்பு, 2006ல், அனைத்துலகக் குழுவானது அமெரிக்காவின் உலகளாவிய கொள்கைகள் தொடர்பான தொடர்ச்சியான கேள்விகளை முன்வைத்தது, அவற்றுள் பின்வருவன அடங்கும்:

> அமெரிக்கா தனது மேலாதிக்க அபிலாஷைகளில் இருந்து பின்வாங்கி, உலகளாவிய அதிகாரத்தை அரசுகளிடையே மிகவும் சமத்துவமாக பகிர்ந்தளிப்பதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்குமா? ஐரோப்பாவிலோ அல்லது ஆசியாவிலோ பொருளாதார மற்றும் சாத்தியமான இராணுவப் போட்டியாளர்களுக்கு சமரசம் மற்றும் சலுகைகளின் அடிப்படையில் அடித்தளத்தை விட்டுக் கொடுக்க அது தயாராக இருக்குமா? அதிகரித்து வரும் சீனாவின் செல்வாக்கை அமெரிக்கா கருணையுடனும், அமைதியாகவும் ஏற்றுக் கொள்ளுமா?

இக்கேள்விகளுக்கு பதிலளித்த நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவானது, ஆம் என்று பதிலளிப்பவர்கள் ‘‘வரலாற்றின் படிப்பினைகளுக்கு எதிராக பெரும் பந்தயங்களை வைக்கின்றனர்’’ என்று பதிலளித்தது.

15. இன்று இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் ஊகத் தன்மை கொண்டவை அல்ல. அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையிலான போர் ஒரு சாத்தியமாக பார்க்கப்படவில்லை, மாறாக தவிர்க்க முடியாததாக பார்க்கப்படுகிறது. வாஷிங்டனின் வெளியுறவுக் கொள்கை ஸ்தாபகத்திற்குள் உள்ள இந்த ஒருமித்த கருத்தானது *Foreign Affairs* இதழின் புதிய ஜனவரி-பிப்ரவரி 2024 இதழில் வெளியிடப்பட்ட ஒரு கட்டுரையில் தொகுக்கப்பட்டுள்ளது. ‘‘இந்தப் பெரிய ஒன்று (The Big One): சீனாவுடன் ஒரு நீண்ட போருக்குத்

தயாரிப்பு” என்று அதன் தலைப்பு அச்சுறுத்தும் வகையில் உள்ளது. இதன் ஆசிரியர் முன்னணி ஏகாதிபத்திய சிந்தனைக் குழுவான ஹட்சன் இன்ஸ்டிடியூட்டின் மூத்த உறுப்பினரான ஆண்ட்ரூ ஜே. கிரெபினெவிச் (ஜூனியர்) ஆவார்.

16. அமெரிக்காவும் சீனாவும் போருக்குச் செல்லும் என்று இக்கட்டுரை கருதுகிறது. அதைப் பற்றி விவாதித்து நேரத்தை வீணடிக்கக் கூடாது என்று சாதாரணமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. உண்மையான கேள்விகள் தைவான் நீரிணை, கொரிய தீபகற்பம், சீன-இந்திய எல்லையில் அல்லது தெற்காசியாவில் போர் எவ்வாறு, எங்கே தொடங்கும் என்பதோடு தொடர்புடையது, மேலும் போர் அணுஆயுதப் போராக நடக்குமா என்பது தொடர்பானது. கிரெபைன்விச் இவ்வாறு கூறுகிறார்:

> ஒரு போர் வெடித்தவுடன், சீனாவும் அமெரிக்காவும் தங்கள் அணு ஆயுதங்களால் ஏற்படும் அபாயங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். சமாதான காலத்தைப் போலவே, பேரழிவு அதிகரிப்பைத் தவிர்ப்பதில் இரு தரப்பினரும் ஒரு வலுவான ஆர்வத்தைத் தக்கவைத்துக் கொள்வார்கள். அப்படியிருந்தும், போரின் தீவிரத்தின் மத்தியில், அத்தகைய சாத்தியத்தை அகற்ற முடியாது. உகந்த சமநிலையைக் கண்டுபிடிப்பதற்கான சவாலை எதிர்கொள்வார்கள், அங்கு அவர்கள் நிலைமையை முழுப் போராக அதிகரிக்காமல் ஒரு ஆதாயத்தைப் பெற பலத்தைப் பயன்படுத்தலாம். இதன் விளைவாக, இரு சக்திகளின் தலைவர்களும் அதிக அளவிலான சுய கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டியிருக்கும்.

போரை மட்டுப்படுத்துவதற்கு, வாஷிங்டனும் பெய்ஜிங்கும் ஒருவருக்கொருவர் சிவப்புக் கோடுகளை அங்கீகரிக்க வேண்டும்— அதாவது குறிப்பிட்ட நடவடிக்கைகள் தீவிரமானவையாகக் கருதப்படுகின்ற போது, மேலும் அவைகள் எதிர்விளைவுகளைத் தூண்டக்கூடும்.

17. பங்கேற்பாளர்களின் தலைவிதியைச் சார்ந்திருக்கும் இருத்தலியல் மோதலுக்கு மத்தியில் விரிவாக்கத்தைக் கட்டுப்படுத்தும் திறனின் மீது அணுஆயுத பிரளயத்தை (nuclear Armageddon) தவிர்ப்பதற்கான ஒருவரின் நம்பிக்கையைப் பணயம்

வைப்பது மாயையைத் தவிர வேறொன்றுமில்லை. எவ்வாறிருப்பினும், ரஷ்யாவிற்கு எதிரான அமெரிக்க-நேட்டோ பினாமிப் போர், அமெரிக்க ஏகாதிபத்தியம் அணுஆயுத பதிலடி அச்சுறுத்தலால் தடுக்கப்படாது என்பதையும், அதன் நோக்கங்களை அடைவதற்காக ஒவ்வொரு “சிவப்புக் கோட்டையும்” தாண்டும் என்பதையும் ஏற்கனவே நிறுவியுள்ளது.

18. தவிர்க்கவியலாத அமெரிக்க-சீனப் போர், அணுஆயுதங்களைப் பயன்படுத்தாமல் கூட, மனிதகுலம் முழுவதற்கும் பேரழிவுகரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை கிரெபினெவிச் ஒப்புக்கொள்கிறார். அவர் பின்வருமாறு எழுதுகிறார்:

> இரு தரப்பினரும் அணுசக்திப் பேரழிவைத் தவிர்த்தாலும், அமெரிக்கா மற்றும் அதன் முக்கிய கூட்டணி பங்காளிகளின் தாயகங்கள் ஓரளவு தீண்டப்படாமல் விடப்பட்டாலும் கூட, அழிவின் அளவும் நோக்கமும் அமெரிக்க மக்களும் அதன் கூட்டணிகளும் அனுபவித்த எதையும் விட அதிகமாக இருக்கும்.

19. கிரெபினெவிச் வந்தடையும் முடிவு என்னவென்றால், இராணுவப் பேரழிவு எப்படியும் தடுக்கப்பட வேண்டும் என்பதல்ல, மாறாக அமெரிக்கா தலைமையிலான கூட்டணியின் “போர் முயற்சிக்கு மக்கள் ஆதரவைத் தக்கவைத்துக்கொள்ளும் திறனும், தியாகம் செய்வதற்கான விருப்பமும் அதன் வெற்றிக்கு முக்கியமானதாக இருக்கும்” என்பதாகும்.



நிமிட்ஸ் வகை விமானம் தாங்கி போர்க்கப்பலான யுஎஸ்எஸ் ஆபிரகாம் லிங்கன் ஜூலை 28, 2022 அன்று பசிபிக்கின் ரிம் இராணுவப் பயிற்சியின் போது உருவாக்கப்பட்ட உருவகம்.
[Photo: Canadian Armed Forces photo by Cpl. Djalma Vuong-De Ramos]

20. தவிர்க்க முடியாத போரின் இந்தப் பயங்கரமான ஏகாதிபத்திய சூழ்நிலையை அமெரிக்க மற்றும் சர்வதேச தொழிலாள வர்க்கம் எதிர்க்க வேண்டும். வட அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியா மற்றும் ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தின் ஏகாதிபத்திய மையங்களிலுள்ள தொழிலாளர்கள், அதிகார வெறி பிடித்த நிதிய-பெருநிறுவன ஏகாதிபத்திய ஆளும் வர்க்கத்தின் பூகோள அரசியல் மற்றும் பொருளாதார நலன்களை பாதுகாப்பதில் எந்த ஆர்வமும் கொண்டிருக்கவில்லை. ரஷ்யா, சீனா மற்றும் பிற முக்கிய முதலாளித்துவ பிராந்திய சக்திகளான பிரேசில், ஆர்ஜென்டினா, எகிப்து, வளைகுடா நாடுகள், துருக்கி, நைஜீரியா, தென்னாப்பிரிக்கா, இந்தியா, இந்தோனேசியா ஆகியவற்றின் தொழிலாளர்கள், பூகோள அரசியலை பல்துருவ முன்னோக்கின் அடிப்படையில் மறுஒழுங்கமைப்பதற்கான பிற்போக்குத்தன முயற்சிகளுக்கு எந்தவொரு முற்போக்கான தன்மையையும் காரணம் காட்டக்கூடாது.

21. அமெரிக்க ஏகாதிபத்தியம் ரஷ்யா-உக்ரேன் போரை தூண்டியது என்ற உண்மையானது, ரஷ்ய மற்றும் சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் நலன்களின் கண்ணோட்டத்தில், உக்ரேன் மீது படையெடுக்கும் புட்டின் அரசாங்கத்தின் முடிவை நியாயப்படுத்தவில்லை. அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தின் ஆத்திரமூட்டல்களுக்கு புட்டின் அரசாங்கத்தின் விடையிறுப்பு சுருக்கமாக வரையறுக்கப்பட்ட “தேசிய பாதுகாப்பு” பற்றிய பரிசீலனைகளால் தீர்மானிக்கப்படவில்லை, மாறாக சோவியத் ஒன்றியத்தின் உடைவு மற்றும் அதன் தேசியமயமாக்கப்பட்ட சொத்துக்களை தனியார்மயமாக்குதல் மற்றும் அப்பட்டமாக திருடுதல் ஆகியவற்றிலிருந்து தோன்றிய ஒட்டுண்ணி தன்னலக்குழு-முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் வர்க்க நலன்களால் தீர்மானிக்கப்பட்டது.

22. சோவியத் ஒன்றியம் கலைக்கப்படுவதற்கு முந்தைய ஆண்டுகளில், ஆளும் அதிகாரத்துவ இயந்திரத்திற்குள் இருந்த அரசியல் மோதலானது, தேசிய மற்றும் இன அடிப்படையில்

வளர்ந்தது. இந்தப் பிற்போக்குத்தனமான போக்கானது பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதத்தை ஸ்ராலின் நிராகரித்ததன் மூலமும், பேரினவாத சோவியத் தேசபக்தி என்ற போர்வையில் ரஷ்ய தேசியவாதத்தை ஊக்குவிப்பதன் மூலமும் தயாரிக்கப்பட்டு வசதியளிக்கப்பட்டது. சோவியத் ஒன்றியத்தின் உடைவுக்குப் பின்னர், ரஷ்ய மற்றும் உக்ரேனின் மிகவும் சக்திவாய்ந்த தேசியவாத அதிகாரத்துவக் குழுக்களுக்கு இடையே ஏற்கனவே இருந்த மோதல்கள், புதிய தேசிய முதலாளித்துவ ஆளும் உயரடுக்கிற்கு இடையிலான மூலப்பொருட்கள், சந்தைகள் மற்றும் பிராந்திய அனுகூலங்களுக்கான ஒரு வெளிப்படையான போராட்டமாக விரைவாக பரிணமித்தன. 1991 அக்டோபரில், சோவியத் ஒன்றியம் கலைக்கப்படுவதற்கு மூன்று மாதங்களுக்கும் குறைவான காலத்தில், அனைத்துலகக் குழுவானது பின்வருமாறு எச்சரித்தது:

> குடியரசுகளில், தேசியவாதிகள் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு புதிய “சுதந்திரமான” அரசுகளை உருவாக்குவதில் உள்ளது என்று பிரகடனம் செய்கிறார்கள். யாரிடமிருந்து சுதந்திரம் என்பதை எங்களைக் கேட்க அனுமதியுங்கள்? மாஸ்கோவில் இருந்து “சுதந்திரத்தை” பிரகடனப்படுத்தும் தேசியவாதிகள், தங்கள் புதிய அரசுகளின் எதிர்காலம் தொடர்பான அனைத்து முக்கிய முடிவுகளையும் ஜேர்மனி, பிரிட்டன், பிரான்ஸ், ஜப்பான் மற்றும் அமெரிக்காவின் கைகளில் வைப்பதைத் தவிர வேறு எதையும் செய்ய முடியாது.

23. தற்போதைய போர், 30 ஆண்டுகளுக்கு முன்னர் அனைத்துலகக் குழு விடுத்த எச்சரிக்கையை நிரூபிக்கின்றது. அமெரிக்க-நேட்டோ போருக்கு எதிரான போராட்டமானது புட்டின் ஆட்சிக்கு ஏற்ப தகவமைத்துக் கொள்வதன் மூலம் நடத்தப்படக்கூடாது. மாறாக, அதன் பிற்போக்குத்தனமான தேசியவாத-முதலாளித்துவ நிகழ்ச்சி நிரலுக்கு அசைக்க முடியாத எதிர்ப்பில் நடத்தப்பட வேண்டும். ரஷ்ய மற்றும் உக்ரேனிய தொழிலாளர்களின் போர்-எதிர்ப்புக் கொள்கையானது புதிய முதலாளித்துவ உயரடுக்குகளுக்கு எதிராக முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் தொழிலாள வர்க்கத்தின் அனைத்து பிரிவுகளின் ஐக்கியத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். முதலாம் உலகப் போரின் போது லெனின் மற்றும் போல்ஷிவிக்குகளால்

ஆதரிக்கப்பட்ட சர்வதேசக் கொள்கை, அவர்களின் தேசிய முதலாளித்துவ அரசைப் பாதுகாப்பதில் சமரசமற்ற எதிர்ப்பு, ரஷ்யாவில் (புட்டின் ஆட்சிக்கு எதிராக) மற்றும் உக்ரேனில் (ஜெலின்ஸ்கி ஆட்சிக்கு எதிராக) இன்றைய தொழிலாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.



லெனின் 1917 ரஷ்யப் புரட்சியின் போது ஒரு கூட்டத்தில் உரையாற்றுகிறார்

24. சோசலிச சர்வதேசியவாதத்தின் அதே அடிப்படைக் கோட்பாடுகளே அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் சீனாவிற்கும் இடையிலான மோதல் குறித்த அனைத்துலகக் குழுவின் அணுகுமுறையை தீர்மானிக்கின்றன. சீனாவின் பொருளாதார வளர்ச்சியை மட்டுப்படுத்தவும், முக்கியமான வளங்கள் மற்றும் தொழில்நுட்பங்களுக்கான அதன் அணுகலைக் கட்டுப்படுத்தவும், அதன் உலகளாவிய செல்வாக்கின் விரிவாக்கத்தைத் தடுக்கவும் அமெரிக்கா முயற்சிக்கிறது. உலக வர்த்தகம் மற்றும் நிதியியல் பரிவர்த்தனைகளின் தூணாக அமெரிக்க டாலர் செயற்படுகின்ற நிலவும் புவிசார் அரசியல் மற்றும் பொருளாதார நிறுவனங்களை மறுசீரமைப்பதன் மூலம் அமெரிக்க ஏகாதிபத்தியம் செலுத்தும் இடைவிடாத அழுத்தத்தை எதிர்கொள்ள சீனா முயற்சிக்கிறது. ஆனால், இந்த கொள்கையானது, ஒரு முற்போக்கான மற்றும் நற்பண்புடைய முகமூடியைக் கொடுக்கும் சீனாவின் முயற்சிகள்

இருந்தபோதிலும், (எடுத்துக்காட்டாக “பெல்ட் அண்ட் ரோடு முன்முயற்சியை Belt and Road Initiative” ஊக்குவிப்பதன் மூலம்) முதலாளித்துவ அடிப்படையில்தான் இது வெளிவருகிறது மற்றும் தற்போதுள்ள உலகளாவிய அதிகார சமநிலையை மறுசீரமைப்பதைத் தவிர வேறு எதையும் இது நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை.

25. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மேலாதிக்கத்திற்கு எதிராக முதலாளித்துவ அரசுகளின் ஒரு புதிய பல்துருவக் கூட்டணியை (a new multi-polar coalition) முன்னிறுத்துவதன் மூலம் போர் வெடிப்பதைத் தடுக்க முடியாது. ஏகாதிபத்திய போருக்கு எதிரான போராட்டமானது தேசிய அரசு அமைப்புமுறையை மறுசீரமைப்பதன் மூலம் அடைய முடியாது, ஆனால் அதன் அழிவின் அடிப்படையில் மட்டுமே அதை அடையப்பட வேண்டும். முதலாம் உலகப் போருக்கு முன்னதாக ரோசா லக்சம்பேர்க் பின்வருமாறு வலியுறுத்தியதைப் போல, “ஏகாதிபத்தியம், போர், நாடுகளைச் சூறையாடுதல், மக்கள் மீது பேரம் பேசுதல், சட்டத்தை மீறுதல் மற்றும் வன்முறைக் கொள்கை ஆகியவற்றுக்கு எதிராக முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடுவதன் மூலம், உலகளாவிய இனப்படுகொலைக்கு எதிராக சமூகப் புரட்சியை அமைப்பதன் மூலம் மட்டுமே போராட முடியும் என்ற முடிவுக்கு தொழிலாள வர்க்கம் வர வேண்டும்.”

# பகுதி - 2

## கோவிட்–19 பெருந்தொற்று நோய் மற்றும் வெகுஜன இறப்புக்களையும் துயரங்களையும் இயல்பாக்குதல்


1. புத்தாண்டு தொடங்கியுள்ள நிலையில், கோவிட் -19 பெருந்தொற்று நோயானது உலக மக்களின் வாழ்க்கை மற்றும் ஆரோக்கியத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. தற்போது, உலகமானது வெகுஜன நோய்த்தொற்று, பலவீனம் மற்றும் இறப்பு ஆகியவற்றின் மற்றொரு அலையைத் தாங்கிக் கொண்டிருக்கிறது, இது டிசம்பர் மாதத்தில் உலகளவில் வேகமாக ஆதிக்கம் செலுத்திய, அதிக உருமாறிய, அதிக தொற்று மற்றும் நோயெதிர்ப்பு எதிரான JN.1 திரிபு வகையால் எரியூட்டப்படுகிறது. 'பெருந்தொற்று நோய் முடிந்துவிட்டது' என்று 2022 செப்டம்பரில் ஜோ பைடெனின் அறிவிப்பால் எடுத்துக்காட்டப்பட்ட ஒவ்வொரு முதலாளித்துவ அரசாங்கத்தின் மற்றும் பெருநிறுவன ஊடகங்களின் பொய்கள் வெறும் பிரச்சாரம் என்று அம்பலப்படுத்தப்படுகின்றன.

2. நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்களின் (CDC) அமைப்பு வெளியிட்டுள்ள மிக சமீபத்திய கழிவுநீர் தரவுகளின்படி - இப்போது வைரஸ் பரவுவதைத் தடமறிவதற்கான ஒரே நம்பகமான அளவீடாக இருக்கும் அனைத்து பெருந்தொற்று நோய் கண்காணிப்பு அமைப்புகளையும் அகற்றிக்கொண்டிருக்கிறது - டிசம்பர் 23 அன்று அமெரிக்கா ஏற்கனவே முழு பெருந்தொற்று நோய் வைரஸ் பரவலின் இரண்டாவது மிக உயர்ந்த மட்டத்தை எட்டியது. 115 மில்லியன் அமெரிக்கர்கள் விடுமுறைக்காக குடும்ப உறுப்பினர்களைப் பார்க்க நீண்ட தூரம் பயணம் செய்து, தங்கள் அன்புக்குரியவர்களுக்கு அறியாமல் வைரஸை பரப்புவதற்கு முன்பு இது நிகழ்ந்தது.

3. இந்த அலை விரைவில் ஒரு நாளைக்கு சுமார் 2 மில்லியன் நோய்த்தொற்றுகளை எட்டும் என்றும், அமெரிக்க மக்கள் தொகையில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதியினர், சுமார் 100 மில்லியன் மக்கள், இந்த அலையின் காலப்பகுதியில் கோவிட்-19 நோயால் பாதிக்கப்படுவார்கள் என்றும் விஞ்ஞானிகள் கணித்துள்ளனர். கழிவுநீர் தரவு இன்னும் கண்காணிக்கப்படும்

அனைத்து நாடுகளிலும், JN.1 திரிபு வகை உலகளவில் ஆதிக்கம் செலுத்துவதால், கடந்த மாதத்தில் இதேபோன்ற பதிவு அல்லது பதிவு செய்யப்பட்ட பரவல் அளவுகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

4. ஒவ்வொரு விளைவுக் குறிகாட்டியும் – அதாவது மருத்துவமனையில் அனுமதிக்கப்படுதல், இறப்புகள் மற்றும் நெடும் கோவிட் (Long COVID) நோயால் பாதிக்கப்பட்டவர்கள் - வரும் வாரங்கள் மற்றும் மாதங்களில் உலகளவில் சீராக மோசமடையும். அமெரிக்காவில் கடுமையாக பாதிக்கப்பட்ட வடகிழக்கு மற்றும் மிட்வெஸ்ட் பிராந்தியங்களின் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவோர் ஏற்கனவே அதிகரித்து வருகின்றனர். பல மருத்துவமனை சங்கிலிகள் நோயாளிகளால் நிரம்பி வழிகின்ற அதே நேரத்தில் சமாளிக்க அவசர போராட்டத் தீவிர முயற்சியில் முகக்கவசங்கள் அணிவதற்கான கட்டளைகளை மீண்டும் செயல்படுத்த கட்டாயப்படுத்துகின்றன. ரோம் மற்றும் இத்தாலியின் பிற பகுதிகளிலும், பிற நாடுகளிலுமுள்ள மருத்துவமனைகள் சுவாச நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளிகளால் நிரம்பி வழிகின்றன. அமெரிக்காவில் அதிகாரப்பூர்வ கோவிட்-19 இறப்புகள் கடந்த மூன்று மாதங்களாக ஒவ்வொரு வாரமும் 1,000 ஐத் தாண்டியுள்ளன, அவைகள் தொடர்ந்து அதிகரிக்கும். 10 சதவீத நோய்த் தொற்றுகள் நெடுங் கோவிட்டுக்கு (Long COVID) வழிவகுக்கும் என்ற உலக சுகாதார அமைப்பின் (WHO) மட்டுப்படுத்தப்பட்ட மதிப்பீட்டைப் பயன்படுத்தி, வரும் மாதங்களில் குறைந்தது 10 மில்லியன் அமெரிக்கர்கள் இந்த பயங்கரமான நோயால் பாதிக்கப்படுவார்கள்.



நெடுங் கோவிட்டின் (Long COVID) மிகவும் பொதுவான சில அறிகுறிகள்

5. பெருந்தொற்று நோயின் தற்போதைய நிலையைச் சுற்றியுள்ள அனைத்து உண்மைகளும் தரவுகளும் உலக மக்களிடமிருந்து மறைக்கப்படுகின்றன. அதற்கு பதிலாக முடிவில்லாத பொய்கள், உண்மைச் சிதைவுகள் மற்றும் பிரச்சாரங்களுக்கு உட்படுத்தப்பட்டு, இப்போது மௌனத்தின் திரையால் மறைக்கப்பட்டுள்ளன. அரசாங்கம், பெருநிறுவனங்கள், ஊடகங்கள் மற்றும் தொழிற்சங்க அதிகாரத்துவங்கள், நெருக்கடியின் உண்மையான தீவிரத்தை திட்டமிட்டு மூடிமறைக்கின்றன. ஒவ்வொரு நாளும் உலகளவில் மில்லியன் கணக்கானோர் நோய்வாய்ப்பட்டு, ஆயிரக்கணக்கானோர் உயிரிழப்பதால், என்ன விளைவுகள் ஏற்பட்டாலும், பெருந்தொற்று நோயின் யதார்த்தத்தை வெறுமனே புறக்கணிப்பது, மறுப்பது மற்றும் பொய்யாக்குவது என்று உத்தியோகபூர்வக் கொள்கைகள் விரிவடைந்துள்ளது.

6. முதலாளித்துவ வர்க்கம் ஒவ்வொரு ஆண்டும் பில்லியன் கணக்கான மக்களைப் பாதிக்க வைப்பதற்கு வைரஸுக்கு சுதந்திரம் அளித்து, மில்லியன் கணக்கானவர்களை பலவீனப்படுத்தி கொல்லும் மற்றும் கட்டுப்பாடற்ற வைரஸ் பரிணாமத்திற்கு உகந்த நிலைமைகளை உருவாக்குதல் என்ற 'என்றென்றும் கோவிட்' கொள்கையைத் தேர்ந்தெடுத்துள்ளது. கோவிட்-19 மிகவும் வீரியமான நோய்க்கிருமி மற்றும் கொடியதாக மாறுவதைத் தடுக்க எதுவும் இல்லை என்று கொள்கைரீதியான விஞ்ஞானிகள் தொடர்ந்து எச்சரிக்கின்றனர், மேலும் அனைத்து தணிப்புகளையும் நீக்குவது அத்தகையதான திரிபு வகைகள் உருவாகக்கூடிய வாய்ப்பை மட்டுமே அதிகரிக்கிறது.

7. ஆளும் உயரடுக்குகள் இனப்படுகொலை மற்றும் அணு ஆயுதப் போரை இயல்பாக்கியது போலவே, கோவிட்-19 இன் தடையற்ற பரவல் மூலம் நடந்து வரும் பாரிய இறப்புகளையும் மனித துயரங்களையும் அவர்கள் வேண்டுமென்றே இயல்பாக்கியுள்ளனர். 21 ஆம் நூற்றாண்டை முதலாளித்துவ காட்டுமிராண்டித்தனத்திற்குள் தள்ளுவதற்கு தலைமை தாங்கும் ஏகாதிபத்திய மையங்களில், எல்லாவற்றிற்கும் மேலாக, மனித வாழ்க்கையின் மீதான அதே அலட்சியம் இப்போது அதிகார அரங்குகளில் வீழ்ந்துள்ளது.

8. பெருந்தொற்று நோயால் ஏற்படும் இறப்புகளின் உண்மையான அளவின் மிகவும் துல்லியமான அளவீடு பெருந்தொற்று நோய்க்கு முந்தைய அடிப்படைகளை விட அதிகப்படியான இறப்புகளாக இருக்கின்றன. 2020 ஆம் ஆண்டில், *தி எகனாமிஸ்ட்டின்* தடமறிதல் படி, பெருந்தொற்று நோயால் 5,460,000 இறப்புகள் ஏற்பட்டன. பெருந்தொற்று நோயின் கொடிய ஆண்டான 2021 ஆம் ஆண்டில், டெல்டா திரிபு வகை இந்தியாவில் மட்டும் மில்லியன் கணக்கானவர்களைக் கொன்றதோடு, இது அதிர்ச்சியூட்டும் வகையில் 12,540,000 கூடுதல் இறப்புகளாக இருந்தன. 2022 ஆம் ஆண்டில், மேலும் 6,900,000 இறப்புகள் ஏற்பட்டன. கடந்த ஆண்டில், *தி எகனாமிஸ்ட்* தனது தடமறிதலைப் புதுப்பித்த கடைசி திகதியான நவம்பர் 18 வரை 2,500,000 க்கும் மேற்பட்ட கூடுதல் இறப்புகள் நிகழ்ந்தன. மொத்தத்தில், இப்போது 27.4 மில்லியன் ஒட்டுமொத்த அதிகப்படியான இறப்புகளாக உள்ளன, இது உத்தியோகபூர்வ எண்ணிக்கையான 7 மில்லியனை விட நான்கு மடங்கு அதிகமாகும்.

9. இந்த இறப்புகளில் பெரும்பாலானவைகள் நோய்த்தொற்றின் கடுமையான கட்டத்திலோ அல்லது வைரஸ் உடலில் ஏற்படுத்தக்கூடிய எண்ணற்ற எதிர்மறையான தாக்கங்கள் காரணமாகவோ கோவிட்-19 நேரடியாக ஏற்படுகின்றன. 2020 முதல் ஆயிரக்கணக்கான ஆய்வுகளில் ஆவணப்படுத்தப்பட்டபடி, கோவிட்-19 தொற்று ஒருவரின் மாரடைப்பு, பக்கவாதம், சிறுநீரக நோய், நீரிழிவு நோய், நோயெதிர்ப்பு குறைபாடு, பல்வேறு நரம்பியல் கோளாறுகள் மற்றும் பலவற்றின் அபாயத்தை உயர்த்துகிறது.

10. தடுக்கக்கூடிய மரணத்தின் இந்த மாபெரும் மட்டத்திற்கு அப்பால், பெருந்தொற்று நோய் மனித வரலாற்றில் மிகப் பெரிய அளவிலான பலவீனத்தையும் உருவாக்கியுள்ளது. உலகளவில் மில்லியன்கணக்கான மக்கள் இப்போது நெடும் கோவிட் எனப்படும் நீண்டகால அறிகுறிகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். இது உடலிலுள்ள ஒவ்வொரு உறுப்பையும் பாதிக்கும். பல ஆய்வுகள் ஒருவரின் நெடும் கோவிட் உருவாக்கும் ஆபத்து ஒவ்வொரு மறுதொற்றுடனும் அதிகரிக்கிறது என்பதைக் காட்டுகிறது, கடந்த மாதம் *Statistics Canada* என்பதில் வெளியிடப்பட்ட ஒரு ஆய்வில், நெடும் கோவிட்-19 நோய்த்தொற்றில் பாதிக்கப்பட்ட கனேடியர்களின் சதவீதம் அவர்களின் முதல் கோவிட்-19 நோய்த்தொற்றுக்குப் பிறகு,

14.6 சதவீதத்திலிருந்து மூன்றாவது தொற்றுநோய்க்குப் பிறகு 38 சதவீதமாக அதிகரித்துள்ளது.

## 'என்றென்றும் கோவிட்' கொள்கையின் பரிணாமம்

11. பெருந்தொற்று நோயின் முதல் ஆண்டில், வெவ்வேறு நாடுகளிலும் ஒவ்வொரு நாட்டின் ஆளும் வர்க்கத்தின் வெவ்வேறு பிரிவுகளிலும் மூன்று மாற்று உத்திகள் தோன்றின: அதாவது ஒழித்தல், தணித்தல் மற்றும் 'சமூக நோயெதிர்ப்பு சக்தி பெருக்கம்' ஆகியவைகளாகும். எந்தவொரு பொது சுகாதார நடவடிக்கைகளும் இல்லாமல் வெறுமனே வைரஸ் பரவ அனுமதிக்கும் பிந்தைய கொள்கையான 'சமூக நோயெதிர்ப்பு சக்தி பெருக்கம்' உத்தியானது முதலில் ஸ்வீடன், பெரிய பிரித்தானியா, பிரேசில், அமெரிக்காவின் சில பகுதிகள் மற்றும் பிற நாடுகளில் செயல்படுத்தப்பட்டது. இக்கொள்கையானது விரைவாக மக்களுக்கு எதிரான ஒரு போரின் வடிவத்தை எடுத்தது மற்றும் வார்த்தையின் முழு அர்த்தத்தில் குற்றமாக இருந்தது.

12. முதலாளித்துவ இலாப வெறியின் மூலக் கணக்கு இந்த நாடுகளின் கொள்கை முடிவுகளைத் தீர்மானிக்கிறது: அதாவது பங்குச் சந்தைகளில் ஒரு பில்லியன் டாலர்களை இழப்பதை விட ஒரு மில்லியன் மக்கள் இறப்பதே சிறந்ததாக இருந்தது. 2020 மார்ச்-ஏப்ரல் மாதங்களில் உலகளாவிய நிதியத் தலைநகரங்களில் கேர்ஸ் சட்டம் (CARES Act) மற்றும் பிற பிணையெடுப்புகள் பாதுகாக்கப்பட்டவுடன், ஆளும் வர்க்கத்தின் அணுகுமுறை உடனடியாக பொது சுகாதாரத்தின் மீது முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிக விரோதம் மற்றும் நெடும் கோவிட்டால் (Long COVID) வெகுஜன இறப்பு மற்றும் பலவீனமடைதல் குறித்து அலட்சியமாக மாறியது. பிரிட்டனின் அப்போதைய பிரதமர் போரிஸ் ஜோன்சன், சமீபத்திய பிரிட்டன் கோவிட் விசாரணையில் வெளிப்படுத்தப்பட்டபடி, கோவிட் -19 என்பது 'வயதானவர்களைக் கையாள்வதற்கான இயற்கையின் வழி' என்று இந்தப் படுகொலை கண்ணோட்டத்தை இவ்வாறு தொகுத்துக் கூறினார்.




பிரதமர் போரிஸ் ஜோன்சன் அக்டோபர் 10, 2020 அன்று கருவூலத் தலைவர் ரிஷி சுனக் உடன் கோவிட் -19 செய்தியாளர் சந்திப்பை நடத்துகிறார் [Photo by Pippa Fowler/No 10 Downing Street / CC BY 2.0]

13. அமெரிக்காவில், *நியூயோர்க் டைம்ஸ்* கட்டுரையாளர் தோமஸ் ஃப்ரீட்மேன் ஸ்வீடனின் பொறுப்பற்ற கொள்கையை ஏற்றுக்கொண்டு, 'சிகிச்சையானது நோயை விட மோசமாக இருக்க முடியாது' என்ற சொற்றொடரை உருவாக்கினார், இது விரைவில் டொனால்ட் டிரம்பின் வேலைக்கு திரும்பிச் செல், பொதுமுடக்க எதிர்ப்பு (anti-lockdown) பிரச்சாரத்திற்கான தாரக மந்திரமாக மாறியது. *கோவிட், முதலாளித்துவம் மற்றும் வர்க்கப் போர்: பெருந்தொற்று நோயின் ஒரு சமூக மற்றும் அரசியல் காலவரிசை* வெளியீட்டின் அறிமுகத்தில், உலக சோசலிச வலைத் தளம் பின்வருமாறு குறிப்பிட்டது:

> சாராம்சத்தில், இந்தச் சொற்றொடர் நிதிய தன்னலக்குழுவின் வர்க்க நலன்களை வெளிப்படுத்தியது. இது, இரண்டு வாரங்களுக்கும் குறைவான காலத்திற்குப் பிறகு, வைரஸ் பரவலை மெதுவாக்கும் பொதுமுடக்கங்கள் அல்லது பிற அத்தியாவசிய பொது சுகாதார நடவடிக்கைகளை இனியும் பொறுத்துக் கொள்ளாது. ஆனால் பெருநிறுவனங்கள் தொழிலாளர்களின் இழப்பில், உழைப்பை சுரண்டி இலாபங்களை உருவாக்குவது அவர்களுக்கு தேவையாக இருந்தது.

14. பிற நாடுகளில், தணிப்பு மூலோபாயத்தின் ஒரு பகுதியாக முகக்கவசம் அணிவதுடன் 2020 ஆம் ஆண்டில் மிகவும் கடுமையான பொதுமுடக்கங்கள் அமல்படுத்தப்பட்டன. 2021 ஆம் ஆண்டில் தடுப்பூசிகள் அறிமுகப்படுத்தப்பட்டவுடன், தடுப்பூசிகள், முகக்கவசம் மற்றும் பிற வரையறுக்கப்பட்ட தணிப்பு நடவடிக்கைகள் மூலம், பெருந்தொற்று நோய் படிப்படியாக முடிவுக்குக் கொண்டுவரப்படும் என்ற கண்ணோட்டம் பரவலாக மாறியது. இது ஒரு மருட்சியான கற்பனை என்பதை நிரூபித்தது, இது மே 2021 இல் அதிக வீரியமுள்ள நோய்க்கிருமி டெல்டா திரிபு வகையின் பரிணாம வளர்ச்சியுடன் வெடித்தது, குறிப்பாக நவம்பர் 2021 இல் மிகவும் தீவிரமாக தொற்றக்கூடிய ஓமிக்ரான் திரிபு வகையாக இருந்தது.

15. உலகெங்கிலுமுள்ள பில்லியன் கணக்கான மக்களை ஓமிக்ரோன் விரைவாக பாதித்து மில்லியன் கணக்கான மக்களைக் கொன்ற நிலையில், பெருந்தொற்று நோய்க்கான உலகளாவிய முதலாளித்துவ விடையிறுப்பு கோவிட்-19 பரவுவதைத் தணிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் பகிரங்கமாக குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாகவும், நிராகரிப்பதாகவும் உருவெடுத்தது. ஓமிக்ரோன் மற்றும் அதன் அனைத்து மரபுவழிகளும் 'இலேசானது,' 'வழக்கமானது' மற்றும் பருவகால சளிக்காய்முதலாளித்துவம்ச்சலுடன் ஒப்பிடக்கூடியது என்று சித்தரிக்க ஒரு இடைவிடாத பிரச்சார நடவடிக்கை தொடங்கப்பட்டது. 2022 முழுவதும், பள்ளிகள் மற்றும் பிற பொது இடங்களில் அனைத்து முககவசம் அணிதல் கட்டளைகளும் நீக்கப்பட்டன, இலவச பி.சி.ஆர் (PCR) பரிசோதனை தளங்கள் அகற்றப்பட்டன, மேலும் நோய்தொற்றுகளின் அளவுகள், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்கள் மற்றும் இறப்புகளின் தரவுகளின் அறிக்கையிடல் படிப்படியாக இல்லாமல் அழிக்கப்பட்டது.

16. இந்த நடவடிக்கையானது 2023 ஆம் ஆண்டில் மட்டுமே ஆழமடைந்தது. கடந்த மே மாதம், உலக சுகாதார அமைப்பு (WHO), பைடென் நிர்வாகம் மற்றும் பிற தேசிய சுகாதார முகமைகள் தங்கள் கோவிட்-19 பொது சுகாதார அவசரநிலை (PHE) பிரகடனங்களை முறையாக முடிவுக்குக் கொண்டு வந்தன, இது ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக மிகப் பெரிய பொது சுகாதார

நெருக்கடிக்கு அனைத்து அதிகாரப்பூர்வ பதிலையும் ஏற்கனவே நடைமுறையில் கைவிட்டதை சட்டமாகத் தொகுத்தது. இதன் விளைவாக, உலக மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் நிராயுதபாணிகளாகி, பெருந்தொற்று நோயின் தற்போதைய ஆபத்துகள் குறித்து அறியாமல் உள்ளனர்.

17. அதே நேரத்தில், பொது சுகாதார அவசரநிலை (PHE) நிலையங்களின் முடிவு, நோய்த்தொற்றுக்கள் மற்றும் இறப்புகளைப் புகாரளிப்பது மற்றும் மருத்துவமனைகளில் பரிசோதனை உள்ளிட்ட அனைத்து பெருந்தொற்று நோய் கண்காணிப்புகளையும் இரத்து செய்ய உதவியது, இது அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்களை முற்றிலும் துல்லியமற்றதாக ஆக்கியது. இந்த கொள்கை மாற்றமானது, அனைத்து பரிசோதனைகள், தடுப்பூசிகள் மற்றும் சிகிச்சைகள் தனியார்மயமாக்கப்படுவதையும் இறுதி செய்யப்பட்டது. ஃபைசர் மற்றும் மோடர்னா இப்போது நோயாளிகள் மற்றும் காப்பீட்டு நிறுவனங்களிடம் தங்கள் தடுப்பூசிகளுக்கு 100 டாலருக்கும் அதிகமாக வசூலிக்கின்றன, மேலும் ஃபைசர் அதன் உயிர் காக்கும் சிகிச்சையான பாக்ஸ்லோவிடை (Paxlovid) 1,390 டாலர்களுக்கு விற்க திட்டமிட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் 13.4 மில்லியனுக்கும் அதிகமான அமெரிக்கர்கள் மருத்துவ உதவி (Medicaid) இலிருந்து விலக்கப்பட்டனர். மேலும் மில்லியன் கணக்கானவர்கள் 2024 ஆம் ஆண்டில் இந்த முக்கியமான சுகாதார காப்பீட்டை இழக்க நேரிடும். நாடு முழுவதுமுள்ள மருத்துவமனைகள் மிகவும் ஆபத்துள்ள மக்களைப் பாதுகாக்கத் தேவையான முகக்கவசம் அணியும் கட்டளைகளை நீக்கின, இது கடந்த ஆண்டு மருத்துவமனையில் பெறப்பட்ட கோவிட்-19 நோய்த்தொற்றுகள் மற்றும் இறப்புகளில் பெரும் அதிகரிப்பை ஏற்படுத்தியது. இதேபோன்ற செயல்முறைகள் ஐரோப்பா முழுவதும் விரிவடைந்துள்ளன, அதே நேரத்தில் உலகெங்கிலும் புதுப்பிக்கப்பட்ட ஊக்கி தடுப்பூசிகள் (booster shots) மற்றும் பாக்ஸ்லோவிட் போன்ற சிகிச்சைகள் பெரும்பாலான மக்களுக்குக் கூட கிடைக்கவில்லை.

18. 'என்றென்றும் கோவிட்' என்பதை உலகளாவிய அளவில் ஏற்றுக்கொள்வது ஆளும் வர்க்கத்தின் அனைத்துப் பிரிவுகளுக்குள்ளும் தேர்ந்தெடுக்கப்பட்ட இனப்பெருக்கத்தை ஆதரிக்கும் யூஜெனிசிஸ்ட் கருத்தாக்கங்களின் (Eugenics என்பது

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் இனப்பெருக்கம் மூலம் மனிதர்களை மேம்படுத்த முடியும் என்ற விஞ்ஞான ரீதியாக தவறான கோட்பாடு) மறுமலர்ச்சியை அவசியமாக்கியுள்ளது. பாரிய நோய்த்தொற்று, பலவீனம் மற்றும் மரணத்தின் தொடர்ச்சியான அலைகளை நியாயப்படுத்துவதற்காக, வயதானவர்கள் மற்றும் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்கள் உத்தியோகபூர்வ சமூகத்தால் பயனற்றவர்களாகக் கருதப்பட வேண்டும்.

19. இந்தப் பாசிச சித்தாந்தத்தின் மிகவும் வெளிப்படையான சூத்திரங்கள் பைடென் நிர்வாகத்தின் கீழ் அமெரிக்காவின் உயர்மட்ட இரண்டு பொது சுகாதார அதிகாரிகளான டாக்டர் ரோசெல் வாலென்ஸ்கி மற்றும் அந்தோனி பௌசி ஆகியோரால் வெளிப்படுத்தப்பட்டன. ஜனவரி 7, 2021 அன்று, ஓமிக்ரான் திரிபு வகை தோன்றிய சில வாரங்களுக்குப் பிறகு, அதிகரித்து வரும் கோவிட்-19 மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவது மற்றும் இறப்புகளின் நிலைமைகளின் கீழ், வாலென்ஸ்கி ABC க்கு அளித்த பேட்டியில், 'ஆரம்பத்தில் உடல்நிலை சரியில்லாதவர்களில்' 'அதிக எண்ணிக்கையிலான இறப்புகள்' நிகழ்கின்றன என்பது 'ஊக்கமளிக்கும் செய்தி' என்று கூறினார். கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, ஆகஸ்ட் 28, 2023 அன்று, பௌசி *BBC* யிடம், 'மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்கள் ஓரங்கட்டப்படுவார்கள், அவர்கள் பாதிக்கப்படுவார்கள், அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்படுவார்கள் மற்றும் சிலர் இறந்துவிடுவார்கள்' என்று கூறினார்.



தேசிய ஒவ்வாமை மற்றும் தொற்று நோய்கள் நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் அந்தோணி பௌசி. [AP Photo/Sarah Silbiger]

20. 'பெருந்தொற்று நோய் முடிந்துவிட்டது' என்ற முற்றிலும் தவறான கூற்றை உலகளாவிய அளவில் ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில், முகக்கவசத்தை ஊக்கப்படுத்தாமலும் எதிர்ப்பதற்குமான பிரச்சாரத்தின் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தைக் கண்ட பெருந்தொற்று நோயின் நான்காவது ஆண்டில் விஞ்ஞானத்தின் மீதான தாக்குதல்கள் அவற்றின் உச்சக் கட்டத்தை அடைந்தன. உலகெங்கிலுமுள்ள அனைத்து அரசாங்கங்கள் மற்றும் பெருநிறுவன ஊடகங்களிலிருந்து வெளிவரும் இந்தத் திட்டமிட்ட தவறான தகவல் பிரச்சாரத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் எந்த அடிப்படையும் கிடையாது.

21. இறுதியில், சக்திவாய்ந்த நிதிய மற்றும் பொருளாதார நலன்கள் ஆயுட்காலத்தைக் குறைப்பதற்கான ஒரு திட்டமிட்ட முயற்சியின் ஒரு பகுதியாக தணிப்புகளைக் (mitigations) கைவிடுவதை வேண்டுமென்றே ஊக்குவித்துள்ளன. பைடென் நிர்வாகத்திலுள்ள முன்னணி பொது சுகாதார அதிகாரிகளால் இந்த தேர்ந்தெடுக்கப்பட்ட இனப்பெருக்கத்தை ஆதரிக்கும் (eugenicist) கொள்கை அமல்படுத்தப்பட்டது. 'விஞ்ஞானத்தைப் பின்பற்றுவேன்' மற்றும் பெருந்தொற்று நோயைத் தடுப்பேன் என்ற தனது தேர்தல் பிரச்சார வாக்குறுதியின் காரணமாக தேர்ந்தெடுக்கப்பட்ட பைடென், கோவிட்-19 நோயால் 700,000 க்கும் மேற்பட்ட அமெரிக்கர்களின் இறப்புகளை மேற்பார்வையிட்டுள்ளார். இது ஜனவரி 2023 க்குள் 'அதைப் பற்றிச் சிந்திப்பதை நிறுத்திவிட்டேன்' என்று அவர் ஒப்புக்கொண்டார்.

22. பெருந்தொற்று நோய்க்கு எதிரான போராட்டமானது, பீட்டர் ஹோட்டஸ் (Peter Hotez) போன்ற விஞ்ஞானிகளின் உயிருக்கு எதிரான சரீர ரீதியான அச்சுறுத்தல்கள் உட்பட, விஞ்ஞான சமூகத்தின் மீதான இடைவிடாத தாக்குதலால் பலவீனப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஒரு பிரச்சாரத்தில் ஜனநாயகக் கட்சி தன்னைத் தகவமைத்துக் கொண்டுள்ளது. அதே நேரத்தில், பல தசாப்த கால வரவுசெலவுத் திட்ட வெட்டுக்களுக்குப் பிறகு பொதுக் கல்வி சுதந்திரமான வீழ்ச்சியில் உள்ளது. இது, இப்போது அனைத்து கூடுதல் பெருந்தொற்று நோய் நிதியும் வறண்டு வருவதால் அதிகரிக்கிறது. அறிவொளிக்குப் (Enlightenment) பிந்தைய

ஒவ்வொரு முற்போக்கான வளர்ச்சியும், பொது சுகாதாரத்தின் அனைத்து அடிப்படைக் கொள்கைகளும், பாசிசம் மற்றும் அணு ஆயுதப் போரை நோக்கிச் செல்லும் ஒரு ஆளும் வர்க்கத்தால் பின்னுக்குத் தள்ளப்பட்டு வருகின்றன.

## 2024 இல் பூகோளரீதியாக ஒழித்தலுக்கான போராட்டம்

23. பெருந்தொற்று நோயை நோக்கிய மூன்றாவது மூலோபாயமான ஒழித்தல், ஆரம்பத்திலிருந்தே சீனா மற்றும் பிற நாடுகளின் அனுபவத்தின் மூலம் சாத்தியம் என்று நிரூபிக்கப்பட்டது. இது வெகுஜன மரணத்தின் கொள்கை மற்றும் வேலைத்திட்டத்திற்கு ஒரு மாற்று உள்ளது என்பதை நிரூபித்தது. பல நூற்றாண்டுகளாக உருவாக்கப்பட்ட மற்றும் துறை வல்லுநர்களுக்கு நன்கு தெரிந்த பொது சுகாதார முறைகளின் சரியான பயன்பாட்டின் மூலம், கோவிட்-19 பரவுவதைத் தடுத்து உயிர்களைக் காப்பாற்ற முடியும்.

24. பெருந்தொற்று நோயை ஆரம்பத்தில் தவறாக கையாண்ட பின்னர், சீன கம்யூனிஸ்ட் கட்சி (CCP) ஜனவரி 2020 இல் விரைவாக தனது போக்கை மாற்றி, வைரஸ் பரவலின் அனைத்து சங்கிலிகளையும் துண்டிக்கும் நோக்கத்துடன், வெகுஜன பரிசோதனை, கடுமையான தொடர்புத் தடமறிதல் மற்றும் பாதிக்கப்பட்ட அனைத்து நோயாளிகளையும் பாதுகாப்பாக தனிமைப்படுத்துதல் ஆகியவற்றுடன் தேவையான பொதுமுடக்கங்களை நடைமுறைப்படுத்தியது. 76 நாட்களுக்குப் பிறகு, மக்கள் பொதுமுடக்கங்களிலிருந்து மீண்டு பெருந்தொற்று நோய்க்கு முந்தைய ஒப்பீட்டளவில் இயல்பான நிலைமைகளுக்குத் திரும்பினர். இந்த வைரஸ் சீனாவின் எல்லைகள் வழியாக நுழையும் அச்சுறுத்தல் உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு ஒவ்வொரு வெடிப்பும் தடுக்கப்பட்டது. நியூசிலாந்து, வியட்நாம், ஆஸ்திரேலியா மற்றும் பிற நாடுகள் சீனாவின் மாதிரியைப் பின்பற்றி, பூஜ்ஜிய-கோவிட்டை விரிவான காலத்திற்கு பராமரிக்க முடிந்தது.

25. பெருந்தொற்று நோயின் முதல் ஆண்டில், சர்வதேச அளவில் மில்லியன் கணக்கானவர்கள் இறந்தாலும், சீனாவில் ஆரம்ப வெடிப்பில் 4,634 உயிர்கள் மட்டுமே இறந்தன, அதைத் தொடர்ந்து அடுத்த ஆண்டில் நான்கு இறப்புகள் மட்டுமே இருந்தன.

இருப்பினும், இந்த ஒழித்தல் மூலோபாயத்தின் நீண்டகால நம்பகத்தன்மையானது அதன் சர்வதேசப் பயன்படுத்துதலைப் பொறுத்து இருந்தது. சீனாவின் பொருளாதார மூலோபாயத்தில் இருந்த அதே அடிப்படை முரண்பாடு, தேசியவாத அடித்தளத்தில் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியும் பெருந்தொற்று நோயின் போக்கில் துன்பகரமாக வெளிப்பட்டது.

26. அடுத்த இரண்டரை ஆண்டுகளுக்கு, ஏகாதிபத்திய சக்திகள் சீனாவிற்கு எதிரான பெருந்தொற்று நோயை ஆயுதமாக்கின, இது அவர்களின் நீண்டகாலப் போருக்கான தயாரிப்புகளின் ஒரு பகுதியாக இருந்தது. இந்த சீன-எதிர்ப்பு பிரச்சாரத்தின் மைய அச்சாக 'வுஹான் ஆய்வுக்கூடத்தின் பொய்' ("Wuhan Lab Lie") இருந்தது - இது ஜனவரி 2020 இல் ட்ரம்பின் பாசிச ஆலோசகர் ஸ்டீவ் பாணனால் பெருந்தொற்று நோய்க்கான அனைத்து பழிகளையும் சீனா மீது திசை திருப்புவதற்காக புனையப்பட்ட ஒரு சதிக் கோட்பாடாகும் - மற்றும் உயிர் காக்கும் பூஜ்ஜிய-கோவிட் கொள்கைக்கு (Zero-COVID policy) எதிரான முடிவற்ற கிளர்ச்சியாகும். இது ஆப்பிள், நைக் மற்றும் பிற முக்கிய மேற்கத்திய பெருநிறுவனங்களிடமிருந்து 2022 ஆம் ஆண்டின் இலையுதிர்காலத்தில் தங்கள் உற்பத்தி வசதிகளை சீனாவிலிருந்து நகர்த்துவதற்கான வெளிப்படையான அச்சுறுத்தல்களில் உச்சக்கட்டத்தை அடைந்தது, இது ஓமிக்ரான் திரிபு வகை பரவுவதைத் தடுத்த தற்காலிக பொதுமுடக்கங்களுக்கு விடையிறுப்பாகும். உண்மையில், ஏகாதிபத்தியம் உத்தரவாதம் அளிக்கப்பட்ட மலிவு உழைப்புக்கு ஈடாக சீன மக்களின் உயிர்களையும் ஆரோக்கியத்தையும் பறித்தது.

27. இறுதியாக இந்த அழுத்தங்களுக்கு அடிபணிந்த சீன அரசாங்கமானது, 2022 நவம்பர்-டிசம்பர் மாதங்களுக்கு இடையில் அனைத்து பூஜ்ஜிய-கோவிட் நடவடிக்கைகளையும் விரைவாக கைவிடுவதற்கான முற்றிலும் மிருகத்தனமான மற்றும் பிற்போக்குத்தனமான முடிவை எடுத்தது. சீன மக்களைப் பொறுத்தவரை, விளைவுகள் பேரழிவுக்கு சற்றும் குறைந்தவை அல்ல. இந்த கொள்கை மாற்றத்தின் விளைவாக கடந்த குளிர்காலத்தில் 1-2 மில்லியன் சீன மக்கள் கோவிட்-19 நோயால் கொல்லப்பட்டதாக பல விஞ்ஞானபூர்வமான ஆய்வுகள் மதிப்பிடுகின்றன. அப்போதிருந்து, சீனா உலகளாவிய 'என்றென்றும்

கோவிட்' கொள்கையில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் நோய்த்தொற்று மற்றும் இறப்புகளின் பல அலைகளுக்குப் பிறகு, நாட்டின் 1.4 பில்லியன் மக்கள்தொகையில் 100 மில்லியனுக்கும் அதிகமான சீன மக்கள் இப்போது நெடும் கோவிட் (Long COVID) நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.



சீனாவிலுள்ள ஒரு மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவு, ஜனவரி 3, 2023. [AP Photo/Andy Wong]

28. சீனாவில் பூஜ்ஜிய-கோவிட் உடனான நீண்டகால வெற்றி, குறைந்த வளர்ச்சியடைந்த மற்றும் அடர்த்தியான மக்கள்தொகை கொண்ட நாடுகளில் கூட கோவிட்-19 ஐ ஒழிப்பதற்கான மூலோபாயத்தின் நம்பகத்தன்மையை நிரூபித்தது. அதே நேரத்தில், ஏகாதிபத்திய சகாப்தத்தில் எந்தவொரு தேசிய அடிப்படையிலான வேலைத்திட்டமும் சாத்தியமற்றது என்பதை அதன் இறுதி முடிவு மீண்டும் உறுதிப்படுத்தியது. இங்கு சாத்தியமற்றது என்று நிரூபிக்கப்பட்டது தேசிய கட்டமைப்பே தவிர கொள்கை அல்ல. ஒழித்தல் சாத்தியமானது மற்றும் அவசியமானது, ஆனால் இப்போது இந்த கொள்கைகளுக்காக போராடும் ஒரு வெகுஜன இயக்கத்தைக் கட்டியெழுப்புவதன் மூலம் மட்டுமே அதை அடைய முடியும்:

- பெருந்தொற்று நோய்க்கு எதிரான போராட்டம் என்பது ஒரு சோசலிச தீர்வு தேவைப்படும் ஒரு அரசியல் மற்றும் புரட்சிகரமான கேள்வியாகும்.

- பொது சுகாதாரத்தின் அமைப்பானது சமூகத் தேவையின் அடிப்படையில் இருக்க வேண்டுமே தவிர பெருநிறுவன இலாபத்தின் அடிப்படையில் இருக்கக்கூடாது.

- அனைத்து சுகாதார, மருந்து மற்றும் காப்பீட்டு நிறுவனங்களிடமிருந்தும் இலாப நோக்கம் முற்றிலுமாக அகற்றப்பட வேண்டும்.

29. பெருந்தொற்று நோயைத் தடுப்பதற்கான ஒரே வழி, உலகளாவிய ஒருங்கிணைக்கப்பட்ட ஒழித்தல் மூலோபாயத்தின் மூலம் ஆகும், இதில் முழு உலக மக்களும் ஒற்றுமையுடனும், பரந்த அடிப்படையிலான பொது சுகாதாரத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான கூட்டு உறுதியுடனும் செயற்பட வேண்டும். இந்த மூலோபாயம் வெகுஜன பரிசோதனை, தொடர்பு தடமறிதல், பாதிக்கப்பட்ட அனைத்து நோயாளிகளுக்கும் பாதுகாப்பான தனிமைப்படுத்தல் மற்றும் சிகிச்சை, உயர்தர முகக்கவசங்களின் உலகளாவிய பயன்பாடு மற்றும் ஹெபா வடிகட்டிகள் (HEPA filters) மூலம் சுத்தமான உட்புற காற்றை வழங்க அனைத்து பொது கட்டிடங்களையும் புதுப்பித்தல் மற்றும் Far-UVC (புற ஊதா சி ஒளியின் ஒரு குறிப்பிட்ட வரம்பு -a specific range of ultraviolet C light) சாதனங்களை பாதுகாப்பாக செயல்படுத்துதல் ஆகியவற்றை மையமாகக் கொண்டிருக்க வேண்டும்.

30. பெருந்தொற்று நோயின் நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, அத்தகைய ஒரு உலகளாவிய மூலோபாயம் உலக முதலாளித்துவத்தின் கீழ் ஒருபோதும் எழாது என்பது தெளிவாகிறது, இது அனைத்து பொது சுகாதார செலவினங்களையும் ஒரு பண வெறி கொண்ட நிதியத் தன்னலக்குழுவின் தணியாத இலாப நலன்களுக்கு அடிபணிய வைக்கிறது. பொது சுகாதாரத்தின் மையக் கருத்தாக நோய் ஒழிக்கப்பட வேண்டும் அல்லது அழிக்கப்பட வேண்டும் என்ற எண்ணமே கைவிடப்பட்டுள்ளது. உலக சோசலிசப் புரட்சியின் மூலம் மட்டுமே பெருந்தொற்று நோயை முடிவுக்குக் கொண்டுவர முடியும், அத்துடன் முதலாளித்துவ காட்டுமிராண்டித்தனம் மற்றும் மூன்றாம் உலகப் போருக்கு மேலும் இறங்குவதைத் தடுக்க முடியும்.

31. பெருந்தொற்று நோயைப் பற்றி கூறப்பட்ட அனைத்தும், காலநிலை மாற்றத்தின் வளர்ந்து வரும் இருத்தலியல் அச்சுறுத்தலுக்கு இன்னும் அதிக சக்தியுடன் பொருந்தும், இதன் தாக்கம் உலகின் பரந்த பகுதிகளால் இன்னும் தீவிரமாக உணரப்படுகிறது. கடந்த ஆண்டு உலகெங்கிலும் வெப்பநிலை பதிவுகள் கிட்டத்தட்ட தினசரி மீறல்கள் மற்றும் பல தீவிர வானிலை நிகழ்வுகளைக் கண்டது. ஒவ்வொரு கண்டத்திலும் பாரிய காட்டுத்தீ, வெப்ப அலைகள் மற்றும் காற்று மாசுபாடு பரவலாகிவிட்டது. அதே நேரத்தில் பனிப்பாறைகள் மற்றும் பனிப்பாறைகளின் உலகளாவிய உருகுதல் விரைவுபடுத்தப்படுகிறது. காலநிலை மாற்றம் மற்றும் திட்டமிடப்படாத நகரமயமாக்கல் ஆகியவற்றின் மூலம் பூமியின் சுற்றுச்சூழல் அமைப்புகளின் ஸ்திரமின்மை, ஆயிரக்கணக்கான உயிரினங்களை அவற்றின் பூர்வீக வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றப்படுகிறது. இதனால் கசிவு நிகழ்வுகள் மற்றும் எதிர்கால பெருந்தொற்று நோய்களின் வாய்ப்புகள் அதிகரிக்கிறது என்று பல ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.



ஜூன் 7, 2023 அன்று கியூபெக் கனடா காட்டுத்தீ புகை நியூ ஜெர்சி மற்றும் நியூயோர்க் நகரத்தை சூழ்ந்துள்ளது. [Photo by Anthony Quintano]

32. விஞ்ஞானத்தின் வளர்ச்சியும், இந்த நெருக்கடியான சமூகத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான சமூகத்தின் வளங்களைப் பயன்படுத்துவதும் ஒரு உலக சோசலிச சமூகத்தின் கீழ் மட்டுமே அடையப்பட முடியும். போருக்கு எதிரான போராட்டத்திற்கு சற்றும்

குறைவில்லாமல், பெருந்தொற்று நோய் மற்றும் காலநிலை மாற்றத்திற்கு எதிரான போராட்டத்திற்கு ஒரு சர்வதேச சோசலிச இயக்கத்தை கட்டியெழுப்புவது அவசியமாகிறது. இந்தக் கொள்கைகளுக்காகப் போராடும் உலகின் ஒரே உண்மையான சோசலிச இயக்கம் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு மட்டுமே ஆகும்.

33. பெருந்தொற்று நோய் என்ற தலைப்பில் உலக சோசலிச வலைத் தளத்திற்கு இணையான எந்த செய்தியும் ஒப்பிடத்தக்க வகையில் அறிக்கையிடல் ஒரு ஊடகத்தில் கூட இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. பெருந்தொற்று நோய்க்கு எதிரான ஒரே முறையான, ஐக்கியப்பட்ட பிரச்சாரத்தை நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும், அதனுடன் இணைந்த சோசலிச சமத்துவக் கட்சிகள் மற்றும் உலக சோசலிச வலைத் தளம் ஆகியவை உலகெங்கிலும் நடத்தியுள்ளன. பல்வேறு நடுத்தர வர்க்க போலி-இடது போக்குகள் பெருந்தொற்று நோயைப் புறக்கணித்துள்ளன அல்லது வெளிப்படையாக 'என்றென்றும் கோவிட்டை' தழுவியுள்ளன. தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் தொடர்ந்து ஆளும் வர்க்கத்தின் நலன்களுக்கு சேவை செய்துள்ளன. ஒவ்வொரு தொழில்துறையிலும் சாமானிய தொழிலாளர்களால் எழுப்பப்பட்ட பெரும் கவலைகளுக்கு மத்தியில் —எல்லாவற்றிற்கும் மேலாக மிகவும் ஆபத்தான நிலைமைகளில் பாதுகாப்பு இல்லாமல் வேலை செய்ய நிர்பந்திக்கப்பட்ட சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் கல்வியாளர்கள் மத்தியில்— தொழிற்சங்க அதிகாரத்துவங்களானது வேலைவாங்கும் எஜமானர்களாக செயல்பட்டன, பாரிய தொற்று, பலவீனம் மற்றும் மரணத்திற்கு தொழிலாளர்களை தியாகம் செய்ய நிர்ப்பந்தித்தன.

34. பெருந்தொற்று நோய்க்கு எதிரான போராட்டமானது முற்றிலும் புரட்சிகரமான கேள்வியாகும். ஆரம்பத்தில் இருந்தே இதைப் புரிந்துகொண்டு, அதற்காகப் போராடிய, தொழிலாள வர்க்கத்திற்குள் கல்வி மற்றும் தெளிவுபடுத்தலுக்கான ஒரு திட்டமிட்ட பிரச்சாரத்தை மேற்கொண்ட ஒரே அரசியல் அமைப்பு நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு மட்டுமே ஆகும். பெருந்தொற்று நோய் குறித்து 6,000 க்கும் மேற்பட்ட கட்டுரைகளை உலக சோசலிச வலைத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. உலகின் வேறு எந்த பத்திரிகையும், முதலாளித்துவ அல்லது போலி-இடது

பத்திரிகைகள், பெருந்தொற்று நோயின் வளர்ச்சியை தொடர்ந்து அறிக்கையிட்டு செய்தியாக்கவில்லை.

35. பெருந்தொற்று நோய்க்கு எதிரான போராட்டமானது வரவிருக்கும் ஆண்டில் தொழிலாள வர்க்கத்தின் போராட்டங்களின் மையத்தில் வைக்கப்பட வேண்டும், இது வெறுமனே ஒப்பந்த பிரச்சினைகளுடன் மட்டுப்படுத்தப்படாது. வாழ்க்கை மற்றும் ஆரோக்கியத்திற்கான மிக அடிப்படை உரிமைகள் மற்றும் பொது சுகாதாரத்திற்கான பல நூற்றாண்டு காலப் போராட்டம் உள்ளிட்ட ஆழமான சமூக பிரச்சினைகள் இந்த போராட்டத்தின் மையத்தில் உள்ளன. தொழிலாள வர்க்கத்தின் வரலாற்று நலன்களை வெளிப்படுத்தும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு மட்டுமே, உலக அளவில் இந்தக் கொள்கைகளுக்காகப் போராடியது, தொடர்ந்தும் போராடி வருகிறது.

# பகுதி - 3

## அதிதீவிர வலதுகளின் எழுச்சியும் ஜனநாயகத்தின் உலகளாவிய உடைவும்

1. காஸா மீதான ஏகாதிபத்திய ஆதரவு இஸ்ரேலிய தாக்குதலில், இனப்படுகொலையானது வெளிப்படையாக ஒரு கொள்கைக் கருவியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, பெருந்தொற்று நோய்க்கான ஆளும் வர்க்கத்தின் பதிலிறுப்பில் வெகுஜன இறப்புக்கள் இயல்பாக்கப்பட்டதைப் போலவே, பாசிச மற்றும் எதேச்சதிகார இயக்கங்கள் மீண்டும் உலகெங்கிலுமுள்ள பிரதான நீரோட்ட அரசியல் நிலப்பரப்பின் ஒரு பகுதியாக உள்ளன. தீவிரமடைந்து வரும் பொருளாதார நெருக்கடி மற்றும் சீரழிந்து வரும் வாழ்க்கைத் தரங்களுக்கு மத்தியதர வர்க்க மற்றும் போலி-இடது அமைப்புகளால் எந்தவொரு உண்மையான முதலாளித்துவ-எதிர்ப்புப் பதிலிறுப்பும் இல்லாத நிலையில், அரசியல் ஆதாயங்கள் அதிதீவிர வலதுகளால் திரட்டப்பட்டு வருகின்றன.

2. புத்தாண்டின் ஆரம்ப நாட்களில், முதலாளித்துவ ஊடகங்களில் 2024 இல் ஜனநாயக ஆட்சி வடிவங்களின் அபாயகரமான நிலை குறித்து வர்ணனைகள் இவ்வாறு பெருகின: “உலகளாவிய ஜனநாயகத்திற்கான ஒரு உருவாக்கம் அல்லது உடைவு ஆண்டு” (*டைம் இதழ்*); “2024 உலகளாவிய ஜனநாயகத்துடன் தேர்தல் அலையை வாக்குகளில் கொண்டு வருகிறது” (*வாஷிங்டன் போஸ்ட்*); “2024 ஜனநாயகத்திற்கு மிகவும் கடினமான ஆண்டாக இருக்கலாம்” (*நியூ யோர்க்கர்*); “2024 இன்னும் ஏன் ஜனநாயகத்திற்கு மிகப் பெரிய ஆண்டாக இருக்க முடியும்” (*எகனாமிஸ்ட்*); மேலும் “2024 இல் ஜனநாயகம் நீடிக்குமா?” (*பைனான்சியல் டைம்ஸ்*).

3. 2024 ஆம் ஆண்டில், உலகளவில் 70 முதல் 80 தனித்தனி தேர்தல்கள் இருக்கும், இதில் 4.2 பில்லியன் மக்கள் அல்லது உலக மக்கள்தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் அடங்குவர். இதில் அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தலும், இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம், பிரிட்டன், மெக்சிகோ, இந்தோனேசியா, பங்களாதேஷ்,

தென்னாப்பிரிக்கா மற்றும் டசின் கணக்கான பிற நாடுகளின் தேர்தலும் அடங்கும்.

4. இந்தத் தேர்தல்களுக்கு மத்தியில், முதலாளித்துவ ஜனநாயக நிறுவனங்களின் கட்டமைப்பு உடைந்து வருகிறது. "சமூகத்திற்குப் பிறகு சமூகத்தில், தாராளவாதமற்ற விழுமியங்களும், அவற்றை அரவணைக்கும் அரசியல்வாதிகளும் வலுப்பெற்று வருகின்றன", என்று *போஸ்ட்* எழுதுகிறது. "பல தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்கள் ஜனநாயகத் திட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை, பத்திரிகை சுதந்திரம் முதல் நீதித்துறை போன்ற நிறுவனங்களின் சுயாதீனம் வரை, ஆளும் ஸ்தாபகத்திற்கு எதிராக நியாயமாக போட்டியிடும் எதிர்க்கட்சிகளின் திறன் வரை கீழறுப்பதில் முனைந்திருப்பதாகத் தெரிகிறது." *பைனான்சியல் டைம்ஸ்* இவ்வாறு எழுதுகிறது, "ஜனநாயகம் மற்றும் தேர்தல் உதவிக்கான ஸ்வீடனின் சர்வதேச நிறுவனம் மேற்கொண்ட உலகளாவிய ஜனநாயக நிலைபற்றிய முன்முயற்சியில், 2023 ஆம் ஆண்டு அனைத்து நாடுகளில் பாதிக்கும் மேற்பட்டவையில், ஜனநாயகம் வீழ்ச்சியடைந்த ஆறாவது ஆண்டைக் குறிக்கிறது என்பதைக் கண்டறிந்தது, இது அவர்களின் பதிவுகள் 1975 இல் தொடங்கியதிலிருந்து மிக நீண்ட சரிவாகும்" என்று எழுதியது.

5. எவ்வாறெனினும், சர்வாதிகாரம் மற்றும் எதேச்சதிகாரத்தை நோக்கிய உந்துதலுக்குப் பின்னாலுள்ள அடிப்படை சமூகக் காரணிகளை ஆராய்வது ஒருபுறம் இருக்க, முதலாளித்துவ ஊடகங்களில் எங்கும் இந்த "ஜனநாயக நெருக்கடியின்" அடித்தளத்திலுள்ள அரசியல் நிகழ்ச்சிப்போக்குகளைப் பற்றிய வரலாற்றுரீதியாக அறியப்பட்ட பகுப்பாய்வு இல்லை.

6. அதிவலதுகள் பலம் பெறுவது என்பது ஒரு உலகளாவிய நிகழ்வாகும். ஜனவரி 6, 2021 பாசிச ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சிக்கு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகுதான் இந்த ஆண்டு அமெரிக்காவில் தேர்தல்கள் நடைபெறும். குடியரசுக் கட்சியின் வேட்புமனுவுக்கு முக்கிய போட்டியாளரான டிரம்ப், தற்போது பைடெனுடன் எந்தப் போட்டியிலும் முன்னணியில் உள்ளார். ஜூன் மாதம் ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல்கள் பற்றிய தற்போதைய கருத்துக் கணிப்புகள், பிரான்சில் மரின் லு பென்னின் தேசியப் பேரணி (*Rassemblement National)* மற்றும் பாசிசவாத ஜேர்மனிக்கான மாற்றீடு (AfD) ஆகிய கட்சிகளை உள்ளடக்கிய, அதிவலதுசாரி அடையாளம் (far-right

Identity) மற்றும் ஜனநாயகக் குழு (Democracy Group) ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றத்தில் மூன்றாவது அல்லது நான்காவது பெரிய கட்சியாக மாறுவதற்கு போதுமான இடங்களை வெல்லும் என்று தற்போதைய கருத்துக் கணிப்புகள் கணித்துள்ளன.



ஆகஸ்ட் 13, 2023 ஞாயிற்றுக்கிழமையன்று, ஆர்ஜென்டினாவின் புவனோஸ் அயர்ஸில் முதன்மைத் தேர்தலின் போது வாக்குச் சாவடிகள் மூடப்பட்ட பின்னர் ஆர்ஜென்டினாவின் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜேவியர் மிலே தனது பிரச்சார தலைமையகத்தில் பேசுறார். [AP Photo/Natacha Pisarenko]

7. கடந்த ஆண்டு நவம்பரில் ஆர்ஜென்டினாவில் பாசிச தொலைக்காட்சி ஆளுமையான ஜேவியர் மிலே தேர்ந்தெடுக்கப்பட்டார், மேலும் நெதர்லாந்தில் கீத் வில்டர்ஸின் முஸ்லிம்-விரோத சுதந்திரத்திற்கான கட்சி (PVV) இன் நிலை உயர்த்தப்பட்டது, இது டிசம்பரில் தேர்தல்களைத் தொடர்ந்து டச்சு அரசியலில் வலுவான சக்தியாக மாறியது. இத்தாலியின் பிரதமராக 2022 இல் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜியார்ஜியா மெலோனி உள்ளார். அவரது அரசியல் பரம்பரை நேரடியாக முசோலினியிடம் செல்கிறது. இந்தியாவில், பிரதமர் நரேந்திர மோடியும் அவரது பாசிசவாத பாரதிய ஜனதா கட்சியும் (BJP) டிசம்பரில் மாநிலத் தேர்தல்களில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து மூன்றாவது முறையாக வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

8. அரசியல் ரீதியாக, பாசிசக் கட்சிகள் மற்றும் தனிநபர்களின் எழுச்சி என்பது அடிமட்டத்திலிருந்து வரும் வெகுஜன இயக்கமாக இருப்பதைக் காட்டிலும் ஆளும் வர்க்கத்தின் வலதிற்கு செல்லும்

ஒரு உலகளாவிய மாற்றத்தின் விளைவாகும். சமூக ஜனநாயகம், ஜனநாயகக் கட்சி, தொழிற்கட்சி அல்லது கன்சர்வேடிவ் என்ற முத்திரை எதுவாக இருந்தாலும், ஸ்தாபனக் கட்சிகளின் கொள்கைகள் அடிப்படையில் ஒன்றுதான்: அதாவது சமூக செலவினங்களில் பாரிய வெட்டுக்கள் மற்றும் இராணுவ செலவினங்களில் அதிகரிப்பு, அத்துடன் உக்ரேனில் ரஷ்யாவிற்கு எதிரான அமெரிக்க-நேட்டோ போர் மற்றும் காஸாவில் இஸ்ரேலிய இனப்படுகொலைக்கான ஆதரவு ஆகும்.

9. அதே நேரத்தில், ஸ்தாபன முதலாளித்துவக் கட்சிகள் பாசிஸ்டுகளின் வேலைத்திட்டத்தையும் கொள்கைகளையும் அதிகரித்தளவில் ஏற்றுக்கொள்கின்றன. ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகள் மற்றும் ஐரோப்பிய பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் "பொது ஐரோப்பிய புகலிட முறையை" (CEAS) ஏற்றுக்கொண்டதுடன், இது தஞ்சம் கோரும் உரிமையை ஒழித்து, ஐரோப்பாவின் கோட்டை அரணை விரிவுபடுத்துகிறது. மேலும், பாரிய நாடுகடத்தல்கள் மற்றும் அகதிகளை வதைமுகாம்களில் தடுத்து வைத்து தண்டனைகளை விதிக்கிறது.

10. வலது நோக்கிய இந்த மாற்றமானது பெயரளவிலான "இடது" கட்சிகளையும் உள்ளடக்கியது: அதாவது 2015 இல் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவிலான சிக்கன நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான வாக்குறுதிகளுடன் ஆட்சிக்கு வந்த கிரேக்கத்தில் சிரிசா, அதன் முன்னோடியை விட இன்னும் ஆழமான சிக்கன நடவடிக்கைகளை செயல்படுத்தத் தொடங்கியது. தொழிற்கட்சியின் பின்னால் எதிர்ப்பைத் திருப்புவதற்காக வேலை செய்த பிரிட்டனில் கோர்பினிசம், கெய்ர் ஸ்டார்மரின் எழுச்சியிலும் மற்றும் கோர்பின் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டதிலும் உச்சக்கட்டத்தையும் அடைந்தது. ஜேர்மனியில் இடது கட்சி, அதன் வலதுசாரி கொள்கைகள் தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியிலான ஆதரவில் சரிவுக்கு வழிவகுத்துள்ளது.

## தன்னலக்குழு மற்றும் சமூக சமத்துவமின்மை

11. இந்த அரசியல் நிகழ்வுப்போக்குகளுக்கு அடித்தளமாக இருப்பது மிகவும் அடிப்படையான சமூக நிகழ்வுப்போக்குகளாகும்.

முதலாம் உலகப் போருக்கும் இரண்டாம் உலகப் போருக்கும் இடைப்பட்ட காலத்தில் முதலாளித்துவ ஜனநாயகத்தின் நெருக்கடியை விளக்கிய ட்ரொட்ஸ்கி, ஜனநாயகத்தை "தேசிய அல்லது சமூகப் போராட்டத்தால் அதிகளவு அழுத்தம் ஏற்றப்பட்ட மின்சாரத்திற்கு எதிரான பாதுகாப்பிற்கான, பாதுகாப்பு சுவிட்சுகள் (safety switches) மற்றும் மின்னிணைப்புத் துண்டிப்புகள் (circuit breakers) கொண்ட ஒரு அமைப்புடன் ஒப்பிட்டார்... வர்க்க மற்றும் சர்வதேச முரண்பாடுகளின் தாக்கத்தின் கீழ், மிக அதிக அழுத்தத்தால், ஜனநாயகத்தின் பாதுகாப்பு சுவிட்சுகள் எரிக்கப்படுகின்றன அல்லது வெடிக்கின்றன. சர்வாதிகாரத்தின் குறு மின்சுற்றிணைப்பு (short circuit) அதைத்தான் பிரதிபலிக்கிறது" என்றார்.

12. ஜனநாயகத்தின் பாதுகாப்பு சுவிட்சுகளை குறு மின்சுற்றிணைப்பு (short circuiting) செய்யும் சர்வதேச முரண்பாடுகள், உலகளாவிய மோதலின் விரிவாக்கத்திற்கும், வெளியுறவுக் கொள்கையின் கருவியாக இனப்படுகொலையை இயல்பாக்குவதற்கும் அடித்தளமாக உள்ளன. லெனின் விளக்கியபடி, ஏகாதிபத்தியம் என்பது "எல்லா வழிகளிலும் பிற்போக்குத்தனமானது" ஆகும். நிதி மூலதனம், அதன் வெளியுறவு மற்றும் உள்நாட்டுக் கொள்கை இரண்டிலும், "ஜனநாயகத்திற்காக அல்ல, மாறாக சர்வாதிகாரத்திற்காக பாடுபடுகிறது." முடிவற்ற போர்க் கொள்கைக்கு சமூகம் முழுவதையும் அடிபணியச் செய்வது, வெடிக்கும் இராணுவ வரவுசெலவுத் திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக சமூக வளங்களை திசைதிருப்புவது மட்டுமல்லாமல், போருக்கு எதிரான எதிர்ப்பை உள்நாட்டில் நசுக்குவதற்கு இன்னும் கூடுதலான நேரடி நகர்வுகளையும் உள்ளடக்குகிறது.

13. ஜனநாயக ஆட்சி வடிவங்களை கீழறுக்கும் இன்றியமையாத வர்க்க முரண்பாடுகள், எல்லாவற்றிற்கும் மேலாக சமூக சமத்துவமின்மையின் தீவிர வளர்ச்சியில் வெளிப்படுகின்றன. முதலாளித்துவ சமூகம் ஒரு தன்னலக்குழுவின் வடிவத்தை எடுத்துள்ளது. இதில் அனைத்து பொருளாதார, சமூக மற்றும் அரசியல் வாழ்க்கைகளும் ஒரு மிகச் சிறிய உயரடுக்கினால் கட்டுப்படுத்தப்படுகின்றன. மற்றொரு ஒப்பீட்டை இதற்குச் செய்வதற்கு, அதாவது செல்வத்தின் அதீத ஒன்றுகுவிப்புகள் கட்டுப்படுத்தமுடியாத பெருக்கமுறும் கட்டியைப் போல

உருமாற்றமடைந்து, அரசின் ஒவ்வொரு நிறுவனத்தையும், நீதிமன்றங்களையும், ஊடகங்களையும் பாதிக்கின்றன.

14. உலகளவில், ஒக்ஸ்பாமின் கூற்றுப்படி, மக்கள்தொகையில் 1 சதவீத செல்வந்தர்கள் இப்போது உலகின் செல்வத்தில் கிட்டத்தட்ட பாதியை வைத்துள்ளனர். அதே நேரத்தில், மிகவும் ஏழ்மையான 50 சதவீதத்தினர் வெறும் 0.75 சதவீதத்தை மட்டுமே வைத்துள்ளனர். வெறும் 81 பில்லியனர்கள் உலக மக்கள் தொகையில் பாதி மக்கள் வைத்திருக்கும் செல்லவத்தை விட அதிக செல்வத்தைக் கொண்டுள்ளனர்.

15. தோமஸ் பிக்கெட்டி, இம்மானுவேல் சேஸ் மற்றும் கேப்ரியல் சுக்மான் ஆகியோரால் உருவாக்கப்பட்ட உலக சமத்துவமின்மை தரவுத்தளமானது (WID), மக்கள்தொகையில் 0.01 சதவீத செல்வந்தர்களுக்கு (இன்று, சுமார் 800,000 பேர்) சொந்தமான செல்வம் 1995 இல் 8 சதவீதத்திலிருந்து இன்று 12 சதவீதமாக உயர்ந்துள்ளது என்று கணக்கிடுகிறது. உயர்மட்ட 0.01 சதவீதத்தினருக்கும் கீழ்மட்ட 50 சதவீதத்தினருக்கும் இடையிலான செல்வத்தின் இடைவெளி 2008ல் இருந்ததை விட இன்று 50 சதவீதம் அதிகமாக உள்ளது. வருமான ஏற்றத்தாழ்வும் அதிகரித்து வருகிறது. உலக மக்கள்தொகையில் 10 சதவீத செல்வந்தர்கள் மொத்த உலக வருமானத்தில் பாதிக்கும் மேல் (52 சதவீதம்) எடுத்துக்கொள்கிறார்கள், அதே நேரத்தில் அடிமட்டத்திலுள்ள பாதிப் பேர் வெறும் 8.5 சதவீதத்தை மட்டுமே எடுத்துக்கொள்கிறார்கள்.

16. WID இன் "உலக சமத்துவமின்மை அறிக்கை 2022" கிடைக்கக்கூடிய சமீபத்திய புதுப்பிப்பு இவற்றைக் கண்டறிந்தது:

> உலக பன்முக மில்லியனர்கள் (multimillionaires) கடந்த பல தசாப்தங்களாக உலகளாவிய செல்வ வளர்ச்சியில் ஒரு சமமற்ற பங்கைக் கைப்பற்றியுள்ளனர்: அதாவது 1990 களின் நடுப்பகுதியில் இருந்து திரட்டப்பட்ட அனைத்து கூடுதல் செல்வங்களிலும் 38 சதவீதத்தை மேல்மட்ட 1 சதவீதம் பேர் எடுத்துக் கொண்டனர், அதே நேரத்தில் அடிமட்ட 50 சதவீதம் பேர் அதில் 2 சதவீதத்தை மட்டுமே எடுத்துக் கொண்டனர். இந்த சமத்துவமின்மை செல்வப் பகிர்வின் மேல் மற்றும் கீழ் பிரிவுகளுக்கு இடையிலான வளர்ச்சி விகிதங்களில் கடுமையான சமத்துவமின்மையிலிருந்து உருவாகிறது. 1995

முதல் பூமியிலுள்ள செல்வந்தர்களின் செல்வம் ஆண்டுக்கு 6 முதல் 9 சதவீதம் வரை வளர்ந்துள்ளது, அதே நேரத்தில் மக்களின் சராசரி செல்வம் ஆண்டுக்கு 3.2 சதவீதம் வளர்ந்துள்ளது. 1995 முதல், பில்லியனர்கள் வைத்திருக்கும் உலகளாவிய செல்வத்தின் பங்கு 1 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாக உயர்ந்துள்ளது. கோவிட் பெருந்தொற்றின் போது இந்த அதிகரிப்பு அதிகரித்தது. உண்மையில், 2020 ஆம் ஆண்டில் உலகளாவிய பில்லியனர்களின் செல்வத்தின் பங்கு மிகக் கடுமையான அதிகரிப்பைக் குறித்துக்காட்டியது.

17. உலகிலேயே அதிக பில்லியனர்களைக் கொண்ட நாடாக அமெரிக்கா உள்ளது, அவர்களின் கூட்டு செல்வம், அமெரிக்கர்களுக்கான வரி நியாயத்திற்கான (Americans for Tax Fairness) அமைப்பின் கூற்றுப்படி, நவம்பர் 2023 இல் 5.2 டிரில்லியன் டாலர்களாக உயர்ந்துள்ளன. இது, இதுவரை பதிவு செய்யப்பட்ட மிக உயர்ந்த தொகையாகும். 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு நிலவரப்படி, அமெரிக்க மக்கள்தொகையில் உயர்மட்ட 10 சதவீதத்தினர் மொத்த செல்வத்தில் மூன்றில் இரண்டு பங்கைக் கொண்டிருந்தனர், அதே நேரத்தில் அடிமட்டத்திலுள்ள பாதிப் பேர் 2.6 சதவீதத்தை மட்டுமே வைத்திருந்தனர்.

18. “ஒரு துருவத்தில் செல்வம் குவிவது என்பது அதே நேரத்தில் பெரும்துயரம், உழைப்பின் வேதனை, அடிமைத்தனம், அறியாமை, மிருகத்தனம், மனச் சீரழிவு என்பன எதிர் துருவத்தில் குவிகிறது” என்று மார்க்ஸ் குறிப்பிட்டார். சுமார் 700 மில்லியன் மக்கள், அல்லது உலக மக்கள்தொகையில் கிட்டத்தட்ட 9 சதவீதம் பேர், 333 மில்லியன் குழந்தைகள் உட்பட ஒரு நாளைக்கு 2.15 டாலருக்கும் குறைவான வருமானத்தின் அதீத வறுமையில் வாழ்கின்றனர் என்று ஐக்கிய நாடுகள் சபை வரையறுக்கிறது.

19. தனிப்பட்ட செல்வக் குவிப்பு, அதன் சொந்த உரிமையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தாலும், அது ஒரு இரண்டாவது நிலை இடத்தைத்தான் பெறுகிறது, மற்றும் முதலாளித்துவ ஆளும் உயரடுக்கிற்குச் சொந்தமான ஒரு சிறிய எண்ணிக்கையிலான மாபெரும் குழுமங்களில் (mega conglomerates) பொருளாதார அதிகாரத்தின் மாபெரும் ஒருங்கிணைப்பதோடு அது பின்னிப் பிணைந்துள்ளது.



ஜேபி மோர்கன் ஹெல்த்கேர் முதலீட்டு மாநாட்டில் ஜேமி டிமோன்.
[Photo by Steve Jurvetson / CC BY 2.0]

20. மாபெரும் இராட்சத வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களால் கட்டுப்படுத்தப்படும் வளங்களின் அளவு மிகப் பெரியதாகும். 2023 ஆம் ஆண்டில், ஜேபி மோர்கன் சேஸ் (JPMorgan Chase - தலைமை நிர்வாக அதிகாரி ஜேமி டிமோன்) ஃபர்ஸ்ட் ரிபப்ளிக் (First Republic) வங்கியை வாங்கிய பிறகு, 3.7 டிரில்லியன் டாலர்கள் சொத்துக்களுடன் (பெரிய பிரித்தானியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை விட இது அதிகமாகும்) உலகின் மிகப் பெரிய வங்கியாக உயர்ந்தது. வான்கார்ட் (Vanguard - நிர்வாகத்தின் கீழ் உள்ள சொத்துக்கள், 7.7 டிரில்லியன் டாலர்கள்) மற்றும் பிளாக்ரொக் (BlackRock - 9.4 டிரில்லியன் டாலர்கள்) போன்ற பிரம்மாண்டமான தனியார் பங்கு நிறுவனங்கள் பொருளாதாரத்தின் பெரும்பகுதியை தங்கள் வசம் பங்குகளை வைத்திருப்பதன் மூலம் கட்டுப்படுத்துகின்றன. S&P 500 இல் 330 நிறுவனங்களின் மிகப் பெரிய பங்குதாரராக வான்கார்ட் உள்ளது, அதே நேரத்தில் வான்கார்ட் மற்றொரு 38 நிறுவனங்களில் முதலாவது முதலீட்டாளராக உள்ளது.

21. 2023 ஆம் ஆண்டில் S&P 500 பங்கு குறியீட்டில் கூர்மையான அதிகரிப்பு ஏழு தொழில்நுட்ப நிறுவனங்களால் இயக்கப்பட்டது: அதாவது அமேசான், ஆப்பிள், ஆல்பாபெட் (கூகிள்), மெட்டா பிளாட்ஃபார்ம்கள் (பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம்), மைக்ரோசொப்ட், என்விடியா மற்றும் டெஸ்லா ஆகியவைகளாகும். அவற்றின் ஒருங்கிணைந்த சந்தை மூலதனம் கடந்த ஆண்டில் 5.2

டிரில்லியன் டாலர்களாக உயர்ந்தன. இது ஒட்டுமொத்தமாக S&P 500 இல் 8.2 டிரில்லியன் டாலர்கள் அதிகரிப்பில் 60 சதவீதத்திற்கும் அதிகமாகும். இந்த பங்குகளில் ஜெஃப் பெசோஸ் (Jeff Bezos - அமேசான்), மார்க் ஜுக்கர்பெர்க் (Mark Zuckerberg -மெட்டா), எலான் மஸ்க் (Elon Musk -டெஸ்லா) மற்றும் தனியார் முதலீட்டு மேலாளர் வான்கார்ட் (Vanguard) ஆகிய நான்கு முதலீட்டாளர்கள் மட்டுமே தங்கள் பங்குகளிலிருந்து 491 பில்லியன் டாலர்களை சம்பாதித்தனர். *ஃபோர்ப்ஸின்* (Forbes) கூற்றுப்படி, கடந்த ஆண்டு அமெரிக்க பில்லியனர் செல்வத்தில் பாதி ஆதாயங்கள் அதிகரித்து வரும் தொழில்நுட்ப பங்குகளிலிருந்து வந்தன, எட்டு தொழில்நுட்ப பில்லியனர்கள் தங்கள் செல்வத்தை குறைந்தது 10 பில்லியன் டாலர்களால் அதிகரித்தனர்.

22. இந்த நிறுவனங்களும் அவற்றின் உரிமையாளர்களும் இணையம் மற்றும் சமூக ஊடகங்கள் மீது மாபெரும் அதிகாரத்தைப் பயன்படுத்துகிறார்கள். குறிப்பாக 2022 ஆம் ஆண்டில் Twitter/X நிறுவனத்தை எலன் மஸ்க் வாங்கிய பிறகு. அவர்கள் அரசாங்கத்துடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளனர் மற்றும் எதிர்ப்பு மற்றும் போர் எதிர்ப்பு கருத்துக்களை தணிக்கை செய்ய தகவல்தொடர்புகள் மீதான தங்கள் கட்டுப்பாட்டைப் பயன்படுத்துகின்றனர். *உலக சோசலிச வலைத் தளம்* தொடர்ந்து முக்கிய சொற்களுக்கான தேடல் முடிவுகளில் நிலை குறைக்கப்படுகிறது. இது ஆரம்பத்தில் 2017 இல் அம்பலப்படுத்தப்பட்ட தணிக்கைச் செயல்முறையாகும், ஆனால் அது அப்போதிருந்து தொடர்கிறது.



பிரான்சின் தலைநகர் பாரீஸிலுள்ள லூவ்ர் அருங்காட்சியகத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை, பிரெஞ்சு ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் வரவேற்கிறார். [AP Photo/Aurelien Morissard]

23. இந்த சமூக இயக்கவியல் ஏகாதிபத்திய நாடுகள் அனைத்திலும், குறைந்த சக்திகளுடன் உள்ளது. ஆசியாவின் மிகப் பெரிய செல்வந்தரான தற்போது இந்தியாவின் முகேஷ் அம்பானி (Mukesh Ambani - நிகர மதிப்பு 100 பில்லியன் டாலர்கள்), மோடியின் முக்கிய ஆதரவாளர்களில் ஒருவராக உள்ளார். கடந்த டிசம்பரில் மாநில தேர்தல்களில் பாஜக (BJP) வெற்றி பெற்றதைத் தொடர்ந்து அவரது சொத்துகள் உயர்ந்தன. சந்தை மூலதனத்தின் அடிப்படையில் இந்தியாவின் மிகப் பெரிய நிறுவனமான ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் (Reliance Industries) ஆனது, எரிசக்தி, சில்லறை வணிகம், தொலைத்தொடர்பு மற்றும் ஜவுளி ஆகியவற்றில் முக்கிய வணிகங்களைக் கொண்ட ஒரு குழுமமான ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் மீதான அவரது கட்டுப்பாட்டிலிருந்து அம்பானியின் செல்வம் பெறப்படுகிறது. மெக்சிகோவின் மிகப் பெரிய செல்வந்தரான கார்லோஸ் ஸ்லிம் (Carlos Slim - நிகர மதிப்பு 105 பில்லியன் டாலர்கள்), அவர் தனது குழுமமான க்ருபோ கார்சோ (Grupo Carso) மற்றும் பிற முதலீடுகள் மூலம் மெக்சிகன் பொருளாதாரத்தின் பெரும் பகுதிகளைக் கட்டுப்படுத்துகிறார்.

24. உலகம் முழுவதும் ஜனநாயகத்தில் இருந்து ஒக்சிஜனை உறிஞ்சும் சக்திகள் இவைகளாகும். அடிப்படைப் பொருளாதாரச் சக்திகளையும் நலன்களையும் கருத்தில் கொள்ளாமல் அடிப்படை

ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்க முடியும் என்ற கருத்து வெறும் கற்பனையே ஆகும்.

## அமெரிக்க ஜனநாயகத்தின் நெருக்கடியும் மற்றும் 2024 தேர்தல்களும்

உலக ஏகாதிபத்தியத்தின் மையப்பகுதி மற்றும் நிதி மூலதனத்தின் உலகளாவிய மையமுமான அமெரிக்காவைப் போல இந்த நிகழ்வுப்போக்குகள் வேறு எங்குமே தெளிவாக வெளிப்பட்டதில்லை. 2024 தேர்தல் பிரச்சாரம் ஜனவரி 6, 2021 பாசிச ஆட்சிக்கவிழ்ப்பின் நிழலின் கீழ் கட்டவிழ்ந்து வருகிறது. இதன் போது டொனால்ட் ட்ரம்ப் பைடெனுக்கு எதிரான தனது தேர்தல் தோல்விக்கான பாராளுமன்ற சான்றிதழை நிறுத்தவும், அரசியலமைப்பை ஒழிக்கவும் மற்றும் ஒரு தனிப்பட்ட சர்வாதிகாரத்தை ஸ்தாபிக்கவும் முயன்றார்.




முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், அயோவாவின் வாட்டர்லூவில் செவ்வாய்க்கிழமை, டிசம்பர் 19, 2023 அன்று நடைபெற்ற காகஸ் கூட்டப் பேரணியில் உரையாற்றுகிறார். [AP Photo/Charlie Neibergall]

26. *உலக சோசலிச வலைத் தளமானது* ஆட்சிக்கவிழ்ப்புக்கு மறுநாள் வெளியிடப்பட்ட அதன் அறிக்கையில், இது “அமெரிக்காவின் வரலாற்றில் ஒரு திருப்புமுனை” என்று எழுதியது.

> அமெரிக்க ஜனநாயகத்தின் இயலாமை மற்றும் காலத்தால் அழியாத தன்மையின் கொடூரமான பெருமைகள் முற்றிலும் அம்பலப்படுத்தப்பட்டு ஒரு வெற்று அரசியல் கட்டுக்கதையாக மதிப்பிழந்துள்ளன. அமெரிக்க பாசிசத்தின் எழுச்சியைப் பற்றிய சின்கிளேர் லூயிஸின் (Sinclair Lewis) நியாயமான புகழ்பெற்ற கற்பனைக் குறிப்பின் தலைப்பிலிருந்து எடுக்கப்பட்ட பிரபலமான சொற்றொடரான "இது இங்கு நடக்க முடியாது" என்பது நிகழ்வுகளால் தீர்க்கமாக முறியடிக்கப்பட்டுள்ளது. பாசிச ஆட்சிக்கவிழ்ப்பு இங்கு நடப்பது மட்டுமல்ல. இது நடந்தது, ஜனவரி 6, 2021 மதியம்.
>
> மேலும், ஆரம்ப முயற்சி அதன் இலக்கில் தோல்வியடைந்தாலும், அது மீண்டும் நடக்கும்.

27. ஆட்சிக்கவிழ்ப்புக்கு முந்தைய மாதங்களிலும் அதற்குப் பிந்தைய மாதங்களிலும், *உலக சோசலிச வலைத் தளமானது* பாசிச கிளர்ச்சிக்குப் பின்னாலுள்ள பரந்த சதியை ஆவணப்படுத்தியது. இதில் ட்ரம்பின் தூண்டுதலின் பேரில் கேப்பிட்டல் மீது தாக்குதல் நடத்துவது இறுதிக் கட்டம் மட்டுமே ஆகும். இந்தச் சதித்திட்டம் அப்போதைய ஜனாதிபதியை மட்டுமல்ல, குடியரசுக் கட்சியின் பெரும்பாலான தலைவர்களையும், இராணுவ-பொலிஸ் இயந்திரம் மற்றும் நீதித்துறையின் கணிசமான பிரிவுகளையும் உள்ளடக்கியிருந்தது.

28. ஒரு சர்வாதிகாரத்தை ஸ்தாபிப்பதற்கான முயற்சியை அரசியல் ஸ்தாபகத்தின் எந்த நிறுவனமும் தீவிரமாக எதிர்க்கவில்லை. அது வெற்றிக்கு மிக அருகில் வந்திருந்தது. பணயக்கைதிகளைத் தேடிப்பிடிக்கும் நோக்கத்துடன், ட்ரம்பின் பாசிசக் கும்பல் கேப்பிட்டல் கட்டிடத்தைக் கைப்பற்றியபோது, இராணுவமும் தேசியப் பாதுகாப்புப் படையினரும் தலையிடவில்லை. ஆட்சிக்கவிழ்ப்பு நடந்து கொண்டிருந்தபோது ஜனநாயகக் கட்சி எதுவும் கூறவில்லை. இறுதியாக தேசிய தொலைக்காட்சியில் சென்று அதை நிறுத்துமாறு ட்ரம்புக்கு பரிதாபகரமான வேண்டுகோளை விடுப்பதற்கு முன்பு பைடெனே பல மணி நேரம் காத்திருந்தார்.

29. கடந்த மூன்று ஆண்டுகளில் வெளிவந்துள்ள ஜனவரி 6 நிகழ்வுகள் பற்றிய கணிசமான தகவல்கள் என்ன நடந்தது என்பதற்கான இந்த மதிப்பீட்டை உறுதிப்படுத்தியுள்ளன. ஆட்சிக் கவிழ்ப்பைத் தோற்றுவித்த சமூக மற்றும் அரசியல் நிலைமைகள் இடைப்பட்ட காலத்தில்தான் தீவிரமடைந்துள்ளன.



ஜனவரி 6, 2021 அன்று வாஷிங்டனிலுள்ள அமெரிக்க கேப்பிட்டலின் கிழக்கு முனையில் Oath Keepers குழுவின் உறுப்பினர்கள். [AP Photo/Manuel Balce Ceneta]

30. இருத்தலியல் அரசியல் நெருக்கடி மற்றும் அரச இயந்திரத்தின் அனைத்து நிறுவனங்களின் உடைவின் நிலைமைகளின் கீழ், 2024 தேர்தல்கள் நடைபெறுகின்றன. திட்டமிட்டபடி தேர்தல் நடத்தப்பட்டாலும், தோல்வியடைந்த கட்சியால் சட்டபூர்வமானது என்ற ஒரு முடிவை ஏற்றுக்கொள்ளுமா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

31. 2023 முடிவடையும் தருவாயில், கொலராடோவிலுள்ள உச்ச நீதிமன்றம் மற்றும் மேய்னேயில் வெளியுறவு செயலாளர் இருவரும் ஜனவரி 6 ஆம் திகதி ட்ரம்ப்பின் அரசியலமைப்புக்கு எதிரான நடவடிக்கைகள் காரணமாக, அவர் வாக்குச்சீட்டில் இடம்பெற முடியாது என்று தீர்ப்பளித்தனர். அதே நேரத்தில், குடியரசுக் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள மாநிலங்களிலுள்ள அதிகாரிகள் பதிலுக்கு பைடெனை நீக்குவதாக அச்சுறுத்தியுள்ளனர். குடியேற்றக் கொள்கையைத் தீர்மானிப்பதற்கான கூட்டாட்சி அரசாங்கத்தின் அரசியலமைப்பு அதிகாரத்தை பகிரங்கமாக சவால் செய்யும் நடவடிக்கைகளை டெக்சாஸ் மாநிலம் எடுத்துள்ளது. நவம்பர்

தேர்தல் முடிவுகளுக்கு இதேபோன்ற சவால், டெக்சாஸில் மட்டுமல்ல, பிற இடங்களிலும் முற்றிலும் சாத்தியமாகும்.

32. அதிகரித்து வரும் பிராந்திய ரீதியான போக்குகள் (sectional tendencies) உள்நாட்டுப் போருக்குப் பிந்தைய உடன்படிக்கை முழுவதையும் தகர்க்க அச்சுறுத்துகின்றன. இந்த உடன்படிக்கை தனி மாநிலங்கள் மீது ஒருங்கிணைந்த கூட்டாட்சி (unified federal) அதிகாரத்தை மீண்டும் நிறுவியது. 1860 ஆம் ஆண்டில், ஆப்ராகம் லிங்கன் எந்த தென் மாநிலங்களிலும் வாக்குச்சீட்டில் இடம்பெறவில்லை என்பது நினைவுகூரத்தக்கது. லிங்கன் பதவியேற்பதற்கு முன்னர், ஏழு தென் மாநிலங்கள் பிரிந்து அமெரிக்காவின் கூட்டமைப்பு மாநிலங்களை (Confederate States) உருவாக்க எடுத்த முடிவு, சில மாதங்களுக்குப் பிறகு உள்நாட்டுப் போர் வெடிப்பதற்கு வழிவகுத்த நிகழ்வுகளைத் தூண்டியது.

33. தற்போதுள்ள அரசியல் கட்டமைப்பை சிதைக்கும் மோதல் ஆளும் வர்க்கத்தின் முற்போக்கான மற்றும் பிற்போக்குத்தனமான பிரிவுகளுக்கு இடையிலானதல்ல. ஜனநாயகக் கட்சியினரும் குடியரசுக் கட்சியினரும் பெருநிறுவன மற்றும் நிதியத் தன்னலக்குழுவின் இரண்டு பிற்போக்குத்தனமான பிரிவுகளாகும். அவர்களின் தந்திரோபாய வேறுபாடுகள் எவ்வளவு தீவிரமாக இருந்தாலும், அவைகள் முற்றிலும் அவர்களின் பொதுவான பிற்போக்கு நிகழ்ச்சி நிரலுக்கு அடிபணிந்தவைகளாக இருக்கின்றன.

34. ஜனநாயகத்திற்கு எதிரான டிரம்பின் அச்சுறுத்தலை தனது மறுதேர்தல் பிரச்சாரத்தின் மையத்தில் வைக்கப் போவதாக பைடென் கூறியதாக கூறப்படுகிறது. இது ஒரு விபச்சார விடுதி பராமரிப்பாளர் ஒழுக்கநெறிமுறை வணிக நடைமுறைகளை வாதாடுவதன் மூலம் தனது நிறுவனத்தின் நற்பெயரைக் கட்டியெழுப்புவேன் என்று பிரகடனம் செய்வதற்கு ஒப்பானதாகும். ஜனவரி 6 கிளர்ச்சி நடந்த சில நாட்களுக்குள், ஒரு “வலுவான” குடியரசுக் கட்சியைக் கொண்டிருப்பது தனது குறிக்கோள் என்று பைடென் அறிவித்தார். ஆட்சிக்கவிழ்ப்பின் பின்னணியிலுள்ள அரசியல் மற்றும் சமூக சக்திகள் அம்பலப்படுத்தப்படுவதைத் தடுக்க ஜனநாயகக் கட்சி தன்னால் முடிந்த அனைத்தையும் செய்துள்ளது. பல்வேறு விசாரணைகளும் வழக்கு விசாரணைகளும் தொடர்ந்து நடைபெற்றன, இறுதியில் எதுவும் நடைபெறவில்லை.



டெல் அவிவ் நகரிலுள்ள பென் குரியன் சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடெனை இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வரவேற்கிறார். [AP Photo/Evan Vucci]

35. கடந்த மூன்று ஆண்டுகளாக, ரஷ்யாவுக்கு எதிரான போரை தீவிரப்படுத்துவதும், அதைத் தொடர்ந்து காஸாவில் இனப்படுகொலைக்கு பகிரங்க ஆதரவு அளிப்பதும் பைடென் நிர்வாகத்தின் முக்கிய நோக்கமாக இருந்து வருகிறது. இந்த ஆண்டு முடிவடையும் தருவாயில், பைடென் நிர்வாகத்தின் உயர்மட்ட அதிகாரிகள் உக்ரேனுக்கான இராணுவ நிதியை அதிகரிப்பதற்கு ஈடாக குடியரசுக் கட்சியினரின் பாசிச புலம்பெயர்ந்தோர்-விரோத நிகழ்ச்சி நிரலை ஆதரிப்பதற்கான தங்கள் உறுதிமொழியை மீண்டும் வலியுறுத்தினர்.

36. காஸாவில் நடந்துவருகிற இனப்படுகொலையை ஆதரிப்பதிலும், இஸ்ரேலுக்கு எதிரான எதிர்ப்பை, யூத எதிர்ப்பு என்று முத்திரை குத்துவதற்கான முன்னெப்போதையும் விட மோசமான நடவடிக்கையிலும் ஜனநாயகக் கட்சியினரும் குடியரசுக் கட்சியினரும் கைகோர்த்துள்ளனர். ஹார்வர்ட் பல்கலைக்கழக தலைவர் கிளாடின் கேயின் கட்டாய இராஜினாமா, இனப்படுகொலையை எதிர்க்கும் மாணவர் குழுக்களை தடை செய்வது உட்பட கல்லூரி வளாகங்களில் அரசியல் அச்சுறுத்தல் மற்றும் ஒரு தணிக்கை நடவடிக்கையின் பகுதியாக இருக்கிறது.

## சோசலிசம் எதிர் முதலாளித்துவம் மற்றும் தன்னலக்குழு

37. ஆளும் உயரடுக்கின் செல்வவளம் மற்றும் பொருளாதாரத்தின் மீதான அதன் மேலாதிக்கத்தின் மீது நேரடித் தாக்குதலுக்கு வெளியே, ஜனநாயக ஆட்சி வடிவங்களை பாதுகாக்க முடியும் என்று கூறுவது அரசியல் மற்றும் அறிவுஜீவித போலித்தனத்தின் உச்சமாகும்.

38. வலதுசாரிகளின் அதிகரித்து வரும் பலமானது, அதன் சொந்த உள்ளார்ந்த சக்தியை விட, இடது என்று கருதப்படுவதன் முற்றிலுமான திவால்நிலையை காட்டுகிறது. போலி-இடது அரசியலின் பல்வேறு வடிவங்களின் திறனற்ற தன்மையின் பின்னணியில் - பேர்னி சாண்டர்ஸ் மற்றும் அமெரிக்க ஜனநாயக சோஷலிஸ்டுகள் (DSA) அமைப்பு; ஜேர்மனியில் இடது கட்சி; ஸ்பெயினில் பொடெமோஸ்; கிரேக்கத்தில் சிரிசா; “இளஞ்சிவப்பு அலை” (“Pink Tide”) இயக்கமும் இலத்தீன் அமெரிக்காவில் லூலாவின் ஆதரவாளர்களும் - தனியார் சொத்துக்கள், பெருநிறுவன இலாபங்கள், தனிப்பட்ட செல்வம் மற்றும் புனித கருவறையின் முன் முழந்தாளிட்டு மண்டியிட்டு போலி-இடதுகள் வணங்குகின்றன. எப்போதாவது “சோசலிசம்” பற்றிய அவர்களின் அழைப்புகள் முற்றிலும் அர்த்தமற்றவைகளும் வெற்று வாய் வீச்சுக்களையும் கொண்டுள்ளன. அவர்கள் கனவு காணும் “சோசலிசம்” என்பது வோல் ஸ்ட்ரீட்டில் பங்கு மதிப்புகளில் வீழ்ச்சியை ஏற்படுத்தாமல், வர்க்கப் போராட்டம் இல்லாமல், ஆளும் வர்க்கத்திடமிருந்து பறிமுதல் செய்யாமல், மற்றும் தொழிலாள வர்க்கத்திற்கு அதிகாரத்தை மாற்றாமல் ஒரு சோசலிசத்தை அடையக்கூடிய ஒன்றாக இருக்கிறது. ஜெரமி கோர்பினின் “சோசலிசம்” பழைய ஃபேபியன்களை கிட்டத்தட்ட போல்ஷிவிக் போல தோற்றமளிக்கச் செய்கிறது. சாண்டர்ஸ், ஒகாசியோ-கோர்டெஸ் மற்றும் அமெரிக்க ஜனநாயக சோசலிஸ்டுகள் அமைப்பு ஆகியவைகளின் கருத்து ரூஸ்வெல்ட்டின் புதிய ஒப்பந்தம் (New Deal) முதல் ஜோன்சனின் பெரும் சமூகம் (Great Society) வரையிலான காலகட்டத்தின் முதலாளித்துவ சீர்திருத்தவாதத்தின் வலதுபுறத்தில் உள்ளவையாக இருக்கிறது.

39. போலி-இடதுகளுக்கான உண்மையான சமூகத் தொகுதியாக இருப்பது உயர் நடுத்தர வர்க்கத்தின் சலுகை பெற்ற பிரிவுகள் ஆகும். அவர்களின் நோக்கம் சமூக மற்றும் பொருளாதார வாழ்க்கையின் தீவிர மறுசீரமைப்பு அல்ல. மாறாக, மேல்மட்டத்தில் இருக்கும் செல்வத்தை மறுபகிர்வு செய்வதாகும். பல்வேறு வகையான இன மற்றும் பாலின அரசியலின் முடிவற்ற ஊக்குவிப்பு என்பது உயர் நடுத்தர வர்க்கத்தின் பிரிவுகளானது பெருநிறுவனங்களின் இயக்குநர் குழாம்கள், கல்வியாளர்கள், தொழிற்சங்க இயந்திரம் மற்றும் அரசாங்கத்திற்குள் அதிகாரம் மற்றும் சலுகை பதவிகளுக்கு போட்டியிடும் வடிவமாகும்.

40. அமெரிக்காவில், பைடென் நிர்வாகத்தின் மூன்று ஆண்டுகள் அமெரிக்க ஜனநாயக சோசலிஸ்டுகள் (DSA) அமைப்பின் “இடது” பாசாங்குகளை விரிவாக அம்பலப்படுத்த உதவியுள்ளன. ஒகாசியோ-கோர்டெஸ் உட்பட காங்கிரசில் DSA இன் முன்னணி உறுப்பினர்கள் இரயில்வே தொழிலாளர்களின் வேலைநிறுத்த நடவடிக்கையை சட்டவிரோதமாக்குவதற்கும் உக்ரேனில் ரஷ்யாவிற்கு எதிரான அமெரிக்க-நேட்டோ போருக்கு நிதியளிப்பதற்கும் வாக்களித்துள்ளனர். காஸாவில் இஸ்ரேலிய இனப்படுகொலைக்கு மத்தியில், ஒகாசியோ-கோர்டெஸ் இஸ்ரேலின் அயர்ன் டோமிற்கு (Iron Dome - ஏவுகணை பாதுகாப்பு தொழில்நுட்பம்) நிதியளிப்பதை ஆதரிப்பதாக அறிவித்தார்.

41. வர்க்க மற்றும் பொருளாதார அதிகாரத்தின் அடிப்படைப் பிரச்சினையைப் புறக்கணித்துவிட்டு ஜனநாயகத்தைப் பாதுகாப்பது மற்றும் பாசிசத்தை எதிர்த்துப் போராடுவது பற்றி விவாதிப்பது — இதன் விளைவாக, முதலாளித்துவத்தை தூக்கியெறிவதற்கு தொழிலாள வர்க்கத்தின் உலகளாவிய அணிதிரட்டலுக்கான கட்டாயத்தை புறக்கணிப்பது — சிடுமூஞ்சித்தனமான மற்றும் அரசியல்ரீதியாக கையாலாகாத வாய்வீச்சுகளாகும். பில்லியனர்களின் செல்வம் பறிமுதல் செய்யப்பட வேண்டும் மற்றும் பிரமாண்டமான பெருநிறுவனங்கள், பெரிய பங்குதாரர்களுக்கு இழப்பீடு வழங்காமல், தனியார் இலாபத்தின் அடிப்படையில் அல்லாமல், சமூகத் தேவையின் அடிப்படையில் இயக்கப்படும் பொது கட்டுப்பாட்டிலுள்ள பயன்பாடுகளாக மாற்றப்பட வேண்டும். முதலாளித்துவ அரசின் ஜனநாயக-விரோத நிறுவனங்கள் மற்றும் ஒடுக்குமுறை அமைப்புகள் (தொழில்முறை

இராணுவம், பொலிஸ் மற்றும் உளவுத்துறை முகமைகள்) ஒழிக்கப்பட வேண்டும் மற்றும் உலக அளவில் ஒரு ஜனநாயக மற்றும் திட்டமிட்ட பொருளாதாரத்தை ஸ்தாபிக்க, தொழிலாளர்களின் கட்டுப்பாடு மற்றும் அதிகாரத்தின் அமைப்புகளால் பதிலீடு செய்யப்பட வேண்டும்.

42. உலகெங்கிலுமுள்ள தொழிலாளர்களின் வளர்ந்து வரும் போராட்டங்கள் சோசலிசத்திற்கான ஒரு வெகுஜன, சர்வதேச இயக்கத்தை அபிவிருத்தி செய்வதற்கான புறநிலை அடித்தளமாகும். இந்த புறநிலை இயக்கத்தை அதிகாரத்திற்கான ஒரு நனவான போராட்டமாக மாற்றுவதற்கு, மார்க்சிச தத்துவம் மற்றும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவால் போராடிப் பாதுகாக்கப்படும் வேலைத்திட்டம் மற்றும் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு பாரிய சர்வதேச சோசலிச இயக்கத்தை தொழிலாள வர்க்கத்தில் அபிவிருத்தி செய்வது தேவைப்படுகிறது.

# பகுதி - 4

## வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சியும் சோசலிசத்திற்கான போராட்டமும்

1. இந்த அறிக்கையின் முந்தைய பகுதிகள் 2024 இன் தொடக்கத்தில் உலக முதலாளித்துவ அமைப்புமுறையின் நெருக்கடியின் முக்கிய கூறுகளில் கவனம் செலுத்தியுள்ளன: அவைகளாவன 1) அமெரிக்காவால் தலைமையேற்று வழிநடத்தப்பட்டுவரும் ஏகாதிபத்திய இராணுவவாதத்தின் விரிவாக்கமும், இதன் விளைவாக ரஷ்யாவுக்கு எதிரான பினாமிப் போர், சீனாவுக்கு எதிரான போருக்கு வெளிப்படையான தயாரிப்பு மற்றும் காஸாவில், இனப்படுகொலையை அரசு கொள்கையின் சட்டபூர்வமான கருவியாக ஏற்றுக்கொள்வது; 2) கோவிட்-19 பெருந்தொற்று நோயை எதிர்கொள்வதற்கும், உலகெங்கிலுமுள்ள எண்ணற்ற மில்லியன் கணக்கான மக்களை நோய், பலவீனம் மற்றும் இறப்புகளிலிருந்து காப்பாற்றுவதற்கும் அடிப்படை பொது சுகாதார நடவடிக்கைகளை வேண்டுமென்றே நிராகரிப்பதன் மூலம் சமூகக் கொள்கையில் ஒரு பாரிய பின்னடைவு; 3) முதலாளித்துவ சமூகத்தின் மேல் மட்டங்களில் செல்வத்தின் அதீத குவிப்பும், இதன் விளைவாக முன்னேறிய முதலாளித்துவ நாடுகளிலும் உலகளாவிய அளவிலும் அதிர்ச்சியூட்டும் சமூக சமத்துவமின்மை நிலவுகிறது; 4) உலகெங்கிலும் ஜனநாயக ஆட்சி வடிவங்களின் சிதைவு மற்றும் உடைவு மற்றும் 1930 களில் இருந்து காணப்படாத அளவில், எதேச்சதிகார மற்றும் பாசிச அரசியல் அமைப்புகள் மற்றும் அரசாங்கங்களின் எழுச்சிகள், ஆகியவைகளாகும்.

2. நாகரீகத்தை காட்டுமிராண்டித்தனத்திலிருந்து பிரிக்கும் “சிவப்புக் கோடுகள்” அனைத்தும் அழிக்கப்பட்டு வருகின்றன. முதலாளித்துவ அரசாங்கங்களின் குறிக்கோள் இதுதான்: அதாவது “குற்றமற்ற எதுவும் நமக்கு அன்னியமானது அல்ல.” அணுஆயுதப் போர் “இயல்பாக்கப்படுகிறது”, இனப்படுகொலை “இயல்பாக்கப்படுகிறது”, பெருந்தொற்று நோய்கள் மற்றும் பலவீனமானவர்கள் மற்றும் வயதானவர்களை வேண்டுமென்றே கொல்வது “இயல்பாக்கப்பட்டுள்ளது”, செல்வக் குவிப்பு மற்றும்

சமூக சமத்துவமின்மையின் அளவிட முடியாத அளவுகள் "இயல்பாக்கப்பட்டுள்ளன", ஜனநாயகத்தை நசுக்குவதும், எதேச்சதிகாரம் மற்றும் பாசிசத்தை நாடுவதும் "இயல்பாக்கப்படுகின்றன."

3. ஒட்டுமொத்தமாக எடுத்துக்கொண்டால், சமூக காட்டுமிராண்டித்தனத்தின் பல்வேறு வடிவங்களின் இயல்பாக்கம் முதலாளித்துவ வர்க்கம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது என்பதைக் குறிக்கிறது. பல்வேறு வகையான சமூகக் கொலைக் கொள்கைகளைக் கொண்ட ஒரு வர்க்கம் அதன் வரலாற்று, பொருளாதார, சமூக மற்றும் அரசியல் சட்டபூர்வத்தன்மையை தெளிவாக இழந்துவிட்டது.

4. முதலாளித்துவத்தை அழிவை நோக்கித் தள்ளும் முரண்பாடுகள், அது தூக்கியெறியப்படுவதற்கான நிலைமைகளையும், சமூகத்தை ஒரு புதிய மற்றும் முற்போக்கான, அதாவது சோசலிச அடித்தளத்தில் மறுஒழுங்கமைப்பதற்கான நிலைமைகளையும் உருவாக்குகின்றன என்ற வரலாற்றுரீதியாக சரிபார்க்கப்பட்ட உண்மை இல்லாவிட்டால், மனிதகுலத்தின் வாய்ப்புகள் இருண்டதாக இருந்திருக்கும். இந்த மறுஒழுங்கமைப்பிற்கான சாத்தியக்கூறு தொழிலாள வர்க்கத்தின் புறநிலை இருப்பில் வேரூன்றியுள்ளது. வர்க்கப் போராட்டம் என்பது நடைமுறையில் சோசலிச மறுஒழுங்கமைப்பின் புறநிலை சாத்தியத்தை அடைவதற்கான வழிமுறையாகும்.

5. எனவே வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சியில் கவனம் செலுத்தப்பட வேண்டும். இந்த ஆண்டு தொடங்குகின்ற நிலையில், முதலாளித்துவத்தின் நெருக்கடி எந்த அளவிற்கு தொழிலாள வர்க்கத்தின் ஒரு எதிர்விளைவான இயக்கத்தை உருவாக்கியுள்ளது?

6. 2023 சமூகப் போராட்டங்களை ஆராய்ந்தால், வர்க்கப் போராட்டத்தின் கணிசமான *அளவுரீதியான* மற்றும் *பண்புரீதியான* வளர்ச்சிக்கு தெளிவான சான்றுகள் கிடைக்கின்றன. சுரண்டல், வீழ்ச்சியடைந்து வரும் வாழ்க்கைத் தரங்கள், ஜனநாயக உரிமைகள் மீதான தாக்குதல்கள் மற்றும் இராணுவவாதத்திற்கு எதிராக வேலைநிறுத்தங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய எதிர்ப்பு வடிவங்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கையானது சந்தேகத்திற்கிடமின்றி அதிகரித்திருப்பது இதன்

அளவுரீதியானதாகும். பண்புரீதியான வளர்ச்சி என்பது வர்க்கப் போராட்டத்தின் பூகோளரீதியான மட்டமாகும், தொழிலாள வர்க்கத்தின் இயக்கத்தின் தேசிய எல்லைகளைத் துடைத்தெறிந்து ஒரு சர்வதேசத் தன்மையை அடைகின்ற போக்கு ஆகும்.



பிப்ரவரி 7, 2023 அன்று பாரிஸில், பிரான்சின் ஓய்வுபெறும் வயதை அதிகரிக்கும் திட்டங்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தின் போது ஆர்ப்பாட்டக்காரர்கள் அணிவகுத்துச் செல்கின்றனர். [AP Photo/Michel Euler]

7. இந்த நிகழ்ச்சிப்போக்கு நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவால் 1988 ஆம் ஆண்டிலேயே எதிர்பார்க்கப்பட்டது. உற்பத்தி செயல்முறையின் அதிகரித்துவரும் பூகோளமயமாக்கல் மற்றும் நாடுகடந்த பெருநிறுவனங்களின் தோற்றம் ஆகியவற்றின் தாக்கங்களை ஆராய்ந்து, ஆகஸ்ட் 30, 1988 அன்று தொழிலாளர் கழகத்தின் (அமெரிக்காவில் சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடி) பதின்மூன்றாவது தேசிய காங்கிரசில் முன்வைக்கப்பட்ட தொடக்க அறிக்கை பின்வருமாறு கூறியது:

> பாட்டாளி வர்க்கப் போராட்டங்களின் அடுத்த கட்டம், புறநிலைப் பொருளாதாரப் போக்குகள் மற்றும் மார்க்சிஸ்டுகளின் அகநிலை செல்வாக்கு ஆகியவற்றின் ஒருங்கிணைந்த அழுத்தத்தின் கீழ், ஒரு சர்வதேசியப் பாதையில் தவிர்க்கவியலாமல் அபிவிருத்தியடையும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். பாட்டாளி வர்க்கம் நடைமுறையில் தன்னை ஒரு சர்வதேச வர்க்கமாக

வரையறுத்துக் கொள்ள முனையும்; இந்த உள்ளார்ந்தப் போக்கின் வெளிப்பாடாக இருக்கும் மார்க்சிச சர்வதேசியவாதிகள், இந்த நிகழ்முறையை வளர்த்து அதற்கு நனவான வடிவம் கொடுப்பார்கள். [நான்காம் அகிலம், ஜூலை-டிசம்பர் 1988, ப. 39]

8. இந்த முன்னோக்கானது, நிகழ்வுகளால் சரிபார்க்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு சர்வதேச அளவில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் வேலைநிறுத்த நடவடிக்கைகளை அதிகரிக்கும் போக்கு தொடர்ந்தது. "சமீபத்திய ஆண்டுகளில் உலகெங்கிலுமுள்ள நாடுகளை உலுக்கிய அரசாங்க எதிர்ப்பு போராட்டங்களின் அலை 2023 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தது" என்று சர்வதேச அமைதிக்கான கார்னகி அறக்கட்டளையானது (Carnegie Endowment for International Peace) டிசம்பரில் தெரிவித்தது. இதில் 83 வெவ்வேறு நாடுகளில் புதிய போராட்டங்களும் அடங்குகின்றன. "கடந்த ஐந்து ஆண்டுகளில் பெரிய போராட்டங்களை சந்திக்காத ஏழு நாடுகளும் இந்தக் குழாமில் இணைந்தன: டென்மார்க், பிரெஞ்சு பொலினீசியா, மொசாம்பிக், நோர்வே, அயர்லாந்து குடியரசு, சுரினாம் மற்றும் ஸ்வீடன் ஆகியவையாகும். மேலும், ஹங்கேரியில் ஆசிரியர்களின் போராட்டங்கள், பங்களாதேஷில் ஆளும் கட்சிக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் மற்றும் துனிசிய ஜனாதிபதி கைஸ் சயீத்தின் ஜூலை 2021 'சுய-ஆட்சிக்கவிழ்ப்பு' மற்றும் எதிர்க்கட்சிகள் மீதான அவரது ஒடுக்குமுறைக்கு எதிர்ப்பைக் காட்டுவது உட்பட இந்த ஆண்டுக்கு முன்னர் தொடங்கிய சில ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பித்தன" என்று அந்த அறக்கட்டளை தெரிவித்துள்ளது.

9. ரஷ்யாவுக்கு எதிரான அமெரிக்க-நேட்டோ போரால் விரைவுபடுத்தப்பட்ட விலைவாசி உயர்வுக்கு எதிரான போராட்டங்கள், பாகிஸ்தான், போர்த்துக்கல் மற்றும் ஸ்லோவேனியா உட்பட பல நாடுகளில் நடந்தன. கானா மற்றும் நைஜீரியாவில் பணக்கொள்கை மற்றும் பணத்தட்டுப்பாடு குறித்த குறைகள் ஆர்ப்பாட்டங்களைத் தூண்டின. பிரான்சில், தேசிய ஓய்வூதிய வயதை அறுபத்திரண்டுலிருந்து அறுபத்து நான்கு ஆக உயர்த்திய ஓய்வூதிய சீர்திருத்தத்திற்கு எதிரான வேலைநிறுத்தங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் இந்த ஆண்டின் தொடக்கத்தில் நாட்டை சீற்றமடையச் செய்தன. செக் குடியரசு மற்றும் பல இந்திய

மாநிலங்களிலும் ஓய்வூதிய சீர்திருத்தம் தொடர்பான ஆர்ப்பாட்டங்கள் நடந்தன.




பிப்ரவரி 1, 2023, வைடிட்ஹாலில் நடந்த தொழிற்சங்க காங்கிரஸ் பேரணியில் வேலைநிறுத்தம் செய்பவர்கள் மற்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள்

10. பிரிட்டனில் நூறாயிரக்கணக்கான இரயில்வே தொழிலாளர்கள், கப்பல்துறைத் தொழிலாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் பிற பிரிவு தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட வேலைநிறுத்தங்களும் இருந்தன. அவைகள் 2022 நடுப்பகுதியில் இருந்து 2023 வரை தொடர்ந்தன. போர்த்துக்கல், பெல்ஜியம் மற்றும் ஜேர்மனியில் பெரும் வேலைநிறுத்தங்கள், கியூபெக்கில் 420,000 பொதுத்துறை தொழிலாளர்களின் வேலைநிறுத்தம், அதிதீவிர வலதுசாரிக் கட்சியான சட்டம் மற்றும் நீதிக் கட்சிக்கு (Law and Justice Party) எதிராக போலந்தில் ஒரு மில்லியனுக்கும் அதிகமானவர்களின் ஆர்ப்பாட்டங்கள், மற்றும், காஸா இனப்படுகொலைக்கு முன்னர், நெதன்யாகுவின் ஜனநாயக விரோத நீதித்துறை சீர்திருத்தங்களுக்கு எதிராக இஸ்ரேலில் நூறாயிரக்கணக்கானோர் பங்கேற்ற ஆர்ப்பாட்டங்களும் அடங்கும். இந்த ஆண்டு முடிவடையும் தருவாயில், ஆர்ஜென்டினாவின் புதிய அதிவலது ஜனாதிபதி ஜேவியர் மிலேக்கு எதிராக பத்தாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாரிய ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்றனர்.

11. கடந்த ஆண்டு அமெரிக்காவில் வேலைநிறுத்த நடவடிக்கைகளில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டது, இதில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையிலும், தொழிலாள

வர்க்கத்தின் வெவ்வேறு பிரிவுகளிலும் போராட்டங்கள் உள்ளடக்கியிருந்தன. 2023 ஆம் ஆண்டில், 1,000ம் அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட 36 பெரிய வேலைநிறுத்தங்கள் நடந்திருந்தன, இது 2022 இல் 23 ஆக இருந்தது என்று தொழிலாளர் புள்ளிவிவர பணியகம் (Bureau of Labor Statistics) தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டு நடந்த பெரிய வேலைநிறுத்தங்களில் கிட்டத்தட்ட 500,000ம் தொழிலாளர்கள் ஈடுபட்டனர், இது 2022 இல் வேலைநிறுத்தம் செய்த 120,600 தொழிலாளர்களை விட கிட்டத்தட்ட நான்கு மடங்கு அதிகமாகும். அக்டோபர் 2023 இல், வேலைநிறுத்தங்கள் காரணமாக 4.5 மில்லியன் நாட்கள் இழக்கப்பட்டன, இது நான்கு தசாப்தங்களில் எந்த மாதத்திலும் நடந்ததை விட மிக அதிகமாகும். முக்கிய வேலைநிறுத்தங்களில் (12) மூன்றில் ஒரு பங்கு செவிலியர்கள் மற்றும் பிற சுகாதாரப் பணியாளர்களை உள்ளடக்கியிருந்தது, இதில் 75,000ம் கைசர் (Kaiser) நிரந்தர தொழிலாளர்களும் அடங்கியிருந்தனர். மேலும் 7 வேலைநிறுத்தங்களில் ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரி மாணவர்களும் உள்ளடங்கியிருந்தனர்.

12. கார்னெல் பல்கலைக்கழக தொழில்துறை மற்றும் தொழிலாளர் உறவுகள் (Cornell University School of Industrial and Labor Relations) கல்லூரியின் வேலைநிறுத்தங்களின் தரவுத்தளம் 508,000ம் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட அனைத்து அளவுகளிலும் 421 வேலைநிறுத்தங்கள் நடந்ததாக தெரிவிக்கிறது. இதில் 100 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களின் 70 வேலைநிறுத்தங்களும் அடங்கும், இது ஒரு வாரத்திற்கும் மேலாக நீடித்தது, இது முந்தைய ஆண்டை விட 59 சதவீதம் அதிகமாகும். 2023 ஆம் ஆண்டில் அனைத்து அளவுகளின் மொத்த வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை 2022 இல் இருந்ததைப் போலவே (424 உடன் ஒப்பிடும்போது 421), வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 224,000 லிருந்து 508,000 ஆக இரு மடங்காக அதிகரித்துள்ளது.




கலிபோர்னியாவின் லொஸ் ஏஞ்சல்ஸிலுள்ள பாரமவுண்ட் பிக்சர்ஸ் முன்பு WGA எழுத்தாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

13. வளர்ந்து வரும் வேலைநிறுத்த இயக்கத்தில் 11,000ம் எழுத்தாளர்கள் மற்றும் 65,000ம் நடிகர்களின் ஈடுபாடு பங்குபற்றலானது, முன்னர் தங்களை “நடுத்தர வர்க்கம்” என்று கருதிய மக்கள்தொகையின் வளர்ந்து வரும் அடுக்குகளை உள்ளடக்கிய தொழிலாள வர்க்கத்தின் வரையறையை விரிவுபடுத்துவதை வெளிப்படுத்தியது. மனிதகுலத்தின் வளர்ச்சிக்கு மகத்தான ஆற்றலைக் கொண்ட செயற்கை நுண்ணறிவு (AI) உள்ளிட்ட விஞ்ஞானத்தில் புரட்சிகர முன்னேற்றங்கள் கலாச்சார மற்றும் தொழில்நுட்ப தொழிலாளர்களின் சுரண்டலை அதிகரிக்கவும், ஒட்டுமொத்த பொருளாதாரத்தின் பரந்த மறுசீரமைப்பை எளிதாக்கவும் பயன்படுத்தப்படுகின்றன.

14. வர்க்கப் போராட்டத்தின் இந்த உலகளாவிய வளர்ச்சியுடன், காஸாவில் இனப்படுகொலைக்கு எதிரான ஒரு வெகுஜன போர் எதிர்ப்பு இயக்கம் 2023 இன் கடைசி மூன்று மாதங்களில் உலகம் முழுவதும் பரவியது, மற்றும் இந்த புத்தாண்டிலும் தொடர்ந்து நிகழும். ஈராக் மீதான அமெரிக்க படையெடுப்பிற்கு எதிரான 2003 ஆர்ப்பாட்டங்களுக்குப் பின்னர், உலக முதலாளித்துவத்தின் உடைவில் மிகவும் முன்னேறிய கட்டத்தில் நடைபெறும் இது, ஏற்கனவே மிகப் பெரிய மற்றும் மிகவும் நீடித்த போர்-எதிர்ப்பு இயக்கமாகும். ஒவ்வொரு வாழத்தகுந்த கண்டத்திலுமுள்ள நூற்றுக்கணக்கான நகரங்களில், மில்லியன் கணக்கான மக்கள்

இஸ்ரேலிய அரசாங்கம் மற்றும் அதன் ஏகாதிபத்திய ஆதரவாளர்களின் காட்டுமிராண்டித்தனத்திற்கு எதிராக தங்கள் எதிர்ப்பை தெரிவிக்க வீதிகளில் இறங்கியுள்ளனர். இந்த ஆர்ப்பாட்டங்கள் சமூகத்தின் பரந்த பன்முகப் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளன. இதில் இளைஞர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

15. ஏகாதிபத்திய நாடுகளில் மிகப் பெரிய ஆர்ப்பாட்டங்கள் லண்டனில் நடந்துள்ளன (நவம்பர் 11 அன்று கிட்டத்தட்ட 1 மில்லியன் மற்றும் பல போராட்டங்களில் 100,000 பேர்கள்); வாஷிங்டன் டி.சி (நவம்பர் 4 அன்று 300,000 க்கும் மேற்பட்டவர்கள்); நியூயோர்க் நகரம், சிக்காகோ மற்றும் லொஸ் ஏஞ்சல்ஸ் (பல ஆர்ப்பாட்டங்களில் 10,000 பேர்கள்); சிட்னி மற்றும் மெல்போர்ன் (நவம்பர் 12 அன்று தலா 50,000 க்கும் மேல்); பேர்லின் (போலீஸ் தடையை மீறி அக்டோபர் 28 அன்று 10,000 க்கும் மேற்பட்டவர்கள்); பாரிஸ் (அக்டோபர் 22 அன்று 15,000 க்கும் மேற்பட்டவர்கள்); ஆம்ஸ்டர்டாம் (அக்டோபர் 15 அன்று 15,000 க்கும் மேல்); ரொறன்ரோ (அக்டோபர் 10 அன்று 15,000 க்கும் மேற்பட்டவர்கள்); மற்றும் டோக்கியோ (நவம்பர் 20 அன்று 1,500). இனப்படுகொலைக்கு எதிராக, குறிப்பாக அரபு உலகம் முழுவதும் மில்லியன் கணக்கானோர் ஆர்ப்பாட்ட எதிர்ப்பில் ஈடுபட்டிருந்தனர்.




கலிபோர்னியாவின் சான்பிரான்சிஸ்கோவில் சுகாதார ஊழியர்களின் அணிவகுப்பு, அக்டோபர் 28, 2023.

16. இனப்படுகொலையையும் பூகோளரீதியான போராட்டங்களையும் மூடிமறைக்க பெருநிறுவன ஊடகங்கள் இயன்ற அனைத்தையும் செய்துள்ளன. போரின் யதார்த்தம் மற்றும் அதற்கு எதிரான எதிர்ப்புக்களை சமூக ஊடகங்கள் மூலம் மட்டுமே முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும். இந்த முன்னேற்றங்களை வெகுஜன மக்கள் நெருக்கமாகப் பின்பற்றி போராட்டங்களை ஏற்பாடு செய்து வருகின்றனர். இதன் விளைவாக, இந்த சமூகத் தளங்களைக் கட்டுப்படுத்தும் தன்னலக்குழுக்கள், குறிப்பாக எலான் மஸ்க் (Twitter/X) மற்றும் மார்க் ஜுக்கர்பெர்க் (பேஸ்புக், இன்ஸ்டாகிராம் மற்றும் த்ரெட்ஸ்) ஆகியோர் வெளிப்படையான தணிக்கையை அதிகளவில் நாடுகின்றனர்.

17. வர்க்கப் போராட்டத்தின் பூகோளரீதியான மீளெழுச்சியின் ஆரம்ப கட்டங்களில் வெளிப்படுத்தப்பட்ட அடிப்படைப் பிரச்சினைகள் மீது கவனத்தை ஈர்ப்பதற்காக வேலைநிறுத்தங்கள் மற்றும் ஆர்ப்பாட்டப் போராட்டங்களின் புறநிலை முக்கியத்துவத்திலிருந்து அது விலகிச் செல்லவில்லை. புறநிலை நெருக்கடியின் முன்னேறிய மட்டத்திற்கும் இந்த நெருக்கடியின் அகநிலை புரிதலுக்கும் தொழிலாள வர்க்கத்தின் நனவில் அதன் அரசியல் தாக்கங்களுக்கும் இடையே ஒரு பெரும் இடைவெளி உள்ளது. சமூக ஜனநாயக, முன்னாள் ஸ்ராலினிச மற்றும் குட்டி முதலாளித்துவ போலி-இடது அமைப்புகளின் பல்வேறு வடிவங்களில் பிற்போக்கு ஏகாதிபத்திய-சார்பு தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் மற்றும் அவற்றின் கூட்டாளிகளால் தொழிலாளர்களின் போராட்டங்கள் மீது தொடர்ந்து ஆதிக்கம் செலுத்துவதில் இந்த இடைவெளி முதலாவதாகவும் முதன்மையாகவும் வெளிப்பாட்டைக் காண்கிறது.

18. ஒவ்வொரு நாட்டிலும், தொழிலாளர்களின் போராட்டங்கள் பெருநிறுவன சார்பு மற்றும் தேசியவாத தொழிற்சங்க இயந்திரத்தால் கழுத்து நெரிக்கப்பட்டன, அரசியல் ஸ்தாபகத்தின் ஒரு பகுதியாக செயல்படும் பல்வேறு இடது மற்றும் போலி-இடது அமைப்புகளால் வெகுஜன போராட்டங்கள் மூச்சுத்திணறிக்கப்பட்டு நிறுத்தப்பட்டன.

19. பிரான்சில், ஜனாதிபதி இமானுவேல் மக்ரோனின் ஓய்வூதிய வெட்டுக்களுக்கு எதிரான எதிர்ப்பு மிகப்பெரியதாக இருந்தது. மக்கள்தொகையில் மூன்றில் இரண்டு பகுதியினர் அவற்றை

நிறுத்தித் தடுப்பதற்காக ஒரு பொது வேலைநிறுத்தத்தை ஆதரித்தனர். எவ்வாறெனினும், CGT மற்றும் CFDT தொழிற்சங்க அதிகாரத்துவங்களானது ஜோன்-லூக் மெலோன்சோனின் அடிபணியாத பிரான்ஸ் (LFI) கட்சியுடன் இணைந்து ஆர்ப்பாட்டங்களை கலைக்கவும் மற்றும் வேலைநிறுத்த நடவடிக்கைகளை மட்டுப்படுத்தவும் வேலைசெய்தன. மக்ரோன் அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகள் மூலமாகவோ அல்லது பாராளுமன்ற அமைப்புகள் மூலமாகவோ ஓய்வூதியங்கள் மீதான தாக்குதலை நிறுத்த முடியும் என்ற கட்டுக்கதையை அவர்கள் ஊக்குவித்தனர், அதே நேரத்தில் தொழிலாளர்கள் மீதான தாக்குதலுக்கும் உக்ரேனில் ரஷ்யாவுக்கு எதிரான அமெரிக்க-நேட்டோ போருக்கும் இடையிலான தொடர்பை மூடிமறைத்தனர். இறுதியில், மக்ரோன் பாராளுமன்றத்திற்கு அப்பாற்பட்ட ஒரு தந்திரோபாயத்தை மேற்கொண்டதன் மூலம் இந்த வெட்டுக்களை கட்டாயப்படுத்த முடிந்தது. அதே நேரத்தில் தொழிற்சங்கங்கள் அதைத் தொடர்ந்து நடந்த வேலைநிறுத்தங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களை தனிமைப்படுத்தவும் நசுக்கவும் வேலை செய்தன.

20. இலங்கையில், விலைவாசி உயர்வு மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு சீர்திருத்தங்கள் குறித்த வெகுஜன ஆர்ப்பாட்டங்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஜூலை 2022 இல் இராஜினாமா செய்யக் கட்டாயப்படுத்தியது. முன்னிலை சோசலிசக் கட்சி (FSP) போன்ற குழுக்களின் ஆதரவுடன் தொழிற்சங்க இயந்திரம், இந்த எதிர்ப்புக்களை பாராளுமன்ற கட்டமைப்பிற்குள் மற்றும் உத்தியோகபூர்வ எதிர்க்கட்சிகளுக்குள் வைத்திருக்க வேலை செய்தன. முழுவதிலும் மிகவும் வெறுக்கப்பட்ட அரசியல் தலைவர்களில் ஒருவரான ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்ற வாக்கெடுப்பில் ஜனாதிபதி கோட்டபாய இராஜபக்ஷவுக்குப் பதிலாக பதவியேற்றார். கடந்த ஆண்டு முழுவதும், விக்கிரமசிங்க அனைத்து பிரதான முதலாளித்துவ கட்சிகளுடனும் இணைந்து, 2023 இன் இறுதியில், அடிப்படை பொருட்களின் விலையை கூர்மையாக அதிகரிக்கும் மற்றும் வறுமையில் கூர்மையான அதிகரிப்பைக் கொண்டுவரும் புதிய வரிகள் உட்பட, இராஜபக்ஷ ஆதரித்த அதே சர்வதேச நாணய நிதியக் கொள்கைகளை அமுல்படுத்துவதற்காக செயற்பட்டு வருகிறார்.



2023 பெப்ரவரி 4 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற 75 ஆவது சுதந்திர தின நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முப்படைகளின் தலைவர்களுடன் கலந்து கொண்டார். [Photo: Sri Lanka president's media division]

21. அமெரிக்காவில், 2023 இன் அனைத்து முக்கிய வேலைநிறுத்தங்களும் பைடென் நிர்வாகத்துடன் நெருக்கமாக பணியாற்றி, தொழிற்சங்க இயந்திரத்தால் தனிமைப்படுத்தப்பட்டு முடிவிற்கு கொண்டுவரப்பட்டன. தொழிற்சங்கத் தலைவர் ஷான் ஃபைன் தலைமையில் UAW தொழிற்சங்கமானது, செப்டம்பர் மற்றும் அக்டோபரில் ஒரு போலியான "வரம்புக்கு உட்பட்ட வேலைநிறுத்தத்தை" நடத்தியது. இது, மிகப் பெரும் மூன்று வாகன நிறுவனங்களில் (Big Three) பணியிலுள்ள 145,000ம் தொழிலாளர்களின் பெரும்பகுதியை, அவர்களின் கோரிக்கைகள் எதையும் பூர்த்தி செய்யாத விற்றுத்தள்ளல் ஒப்பந்தங்கள் மீது தொழிலாளர்கள் வாக்களிக்கும் முன்பே, வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது. அமெரிக்க ஜனநாயக சோசலிஸ்டுகள் (DSA) உட்பட போலி-இடது குழுக்களால் ஃபெய்ன் இதற்குப் பெரிதும் ஊக்குவிக்கப்பட்டதுடன், இது நேரடியாக பெருநிறுவன-சார்பு தொழிற்சங்க இயந்திரத்திற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

22. UAW இன் நடவடிக்கைகள் தனித்துவமானவை அல்ல. எல்லா இடங்களிலும், தொழிற்சங்கங்கள் தனித்துவமான சமூக நலன்களைக் கொண்ட ஒரு உயர்-நடுத்தர வர்க்க அடுக்குகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன. அவைகள் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக்

கூறிக்கொள்ளும் தொழிலாளர்களின் நலன்களிலிருந்து சுயாதீனமானவையாகவும் மற்றும் விரோதமானவையாகவும் இருக்கின்றன. நூறாயிரக்கணக்கான தனிநபர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள அமெரிக்காவில் தொழிற்சங்க அதிகாரத்துவத்தின் ஒட்டுமொத்த வருமானம் பல பில்லியன் டாலர்கள் ஆகும். UAW தொழிறுசங்கத்தின் டெட்ராய்ட் தலைமையகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கான வருடாந்திர ஊதியம் 75 மில்லியன் டொலர்களை தாண்டுகிறது. AFL-CIO தொழிற்சங்கத்துடன் இணைந்த தொழிற்சங்கங்களிலுள்ள உயர்மட்ட நிர்வாகிகளான, அமெரிக்க ஆசிரியர் கூட்டமைப்பின் தலைவர் ராண்டி வெய்ன்கார்டன் போன்றவர்கள், தொழிற்சங்கங்களின் சாமானிய உறுப்பினர்களின் ஊதியத்தை விட பத்து முதல் இருபது மடங்கு அதிகமாக, கணிசமான ஆறு இலக்க சம்பளங்களைப் பெறுகின்றனர்.

23. 1940ல் ட்ரொட்ஸ்கி "ஏகாதிபத்தியத்தின் அழியும் சகாப்தம்" என்று அவர் அழைத்ததில் தொழிற்சங்கங்களின் சீரழிவை இவ்வாறு பகுப்பாய்வு செய்தார்.

> உலகம் முழுவதிலும் நவீன தொழிற்சங்க அமைப்புகளின் வளர்ச்சியில், அல்லது இன்னும் சரியாகச் சொல்வதானால், சீரழிவில் ஒரு பொதுவான அம்சம் உள்ளது: அதாவது அவைகள் அரசு அதிகாரத்துடன் நெருக்கமாக ஒருங்கிணைந்து வளர்வதே ஆகும். இந்த குறிப்பிட்ட நிகழ்ச்சிப்போக்கு நடுநிலை எனப்பட்ட, சமூக-ஜனநாயக, கம்யூனிஸ்ட் மற்றும் 'அராஜகவாத' தொழிற்சங்கங்களிடையே சமமாக பகிரப்பட்ட பண்பாகும். இந்த உண்மை மட்டுமே "ஒன்றாக வளர்ச்சியடையும்" போக்கு இந்த அல்லது அந்த கோட்பாட்டில் உள்ளார்ந்ததாக இல்லை, மாறாக அனைத்து தொழிற்சங்கங்களுக்கும் பொதுவான சமூக நிலைமைகளிலிருந்து பெறப்படுகிறது என்பதைக் காட்டுகிறது.
>
> ஏகபோக முதலாளித்துவமானது போட்டி மற்றும் கட்டுப்பாடற்ற தனியார் முன்முயற்சியை அடிப்படையாகக் கொண்டதல்ல. அதற்கு பதிலாக, இது மையப்படுத்தப்பட்ட கட்டளையை நம்பியுள்ளது. பலமான அறக்கட்டளைகள், சிண்டிகேட்கள், வங்கிக் கூட்டமைப்புகள் போன்றவற்றின் தலைமையில் இருக்கும் முதலாளித்துவக் கும்பல்கள்,

பொருளாதார வாழ்க்கையை அரசு அதிகாரத்துவத்தைப் போலவே அதே உயரத்திலிருந்து பார்க்கின்றன. ஒவ்வொரு கட்டத்திலும் பிந்தையவர்களின் (அரசு அதிகாரத்துவம்) ஒத்துழைப்பு அவர்களுக்குத் தேவைப்படுகிறது. தொழில்துறையின் மிக முக்கியமான கிளைகளிலுள்ள தொழிற்சங்கங்கள் வெவ்வேறு நிறுவனங்களுக்கு இடையிலான போட்டியிலிருந்து இலாபம் ஈட்டுவதற்கான சாத்தியக்கூறுகளை பெறமுடியாமல் இழக்கின்றன. அரசு அதிகாரத்துடன் நெருக்கமாக பிணைந்துள்ள ஒரு மையப்படுத்தப்பட்ட முதலாளித்துவ எதிரியை அவர்கள் எதிர்கொள்ள வேண்டும். எனவே, தொழிற்சங்கங்கள் (அவர்கள் சீர்திருத்தவாத நிலைப்பாட்டில் இருக்கும் வரை, அதாவது, தனியார் சொத்துக்களுக்கு தங்களை மாற்றிக் கொள்ளும் நிலைகளில்) முதலாளித்துவ அரசுக்கு தங்களைத் தகவமைத்துக் கொள்ளவும், அதன் ஒத்துழைப்பிற்காகப் போராடவும் வேண்டும்.



மெக்சிகோவில் லியோன் ட்ரொட்ஸ்கி

24. 84 ஆண்டுகளுக்கு முன்னர் ட்ரொட்ஸ்கியால் அடையாளம் காணப்பட்ட போக்கு, தற்போது "தொழிற்சங்கங்கள்" என்று வர்ணிக்கப்படும் அமைப்புக்கள் நடைமுறையில், இச்சொல்லின்

வரலாற்று அர்த்தத்துடன் எந்தத் தொடர்பும் கொண்டிருக்காத அளவுக்கு அசுரத்தனமான மாற்றங்களை அடைந்துள்ளது. “ஏகாதிபத்திய அழிவின் சகாப்தத்தில் தொழிற்சங்கங்கள்” என்ற தனது 1940 ஆண்டு கட்டுரைக்கு முன்பே, ட்ரொட்ஸ்கி (1937 இல்) ஒரு குறிப்பிட்ட அமைப்பின் புறநிலை பாத்திரத்தின் அடிப்படையில் அல்லாமல், அதன் உத்தியோகபூர்வ தலைப்பின் அடிப்படையில் கொள்கையை தீர்மானிக்கும் அளவிற்கு, கலைச்சொல்லின் வழிபாட்டு மோகத்தை உருவாக்கும் போக்குக்கு எதிராக எச்சரித்தார். அவர் பின்வருமாறு எழுதினார்:

> தொழிற்சங்கம் போன்ற ஒரு தொழிலாளர் அமைப்பின் பண்பானது தேசிய வருமானப் பகிர்வுடன் அதன் உறவால் தீர்மானிக்கப்படுகிறது. கிரீன் அண்ட் கம்பெனி [அந்த நேரத்தில் அமெரிக்க தொழிலாளர் கூட்டமைப்பின் தலைமைகள்] உற்பத்திச் சாதனங்களில் தனியார் சொத்துடைமையைப் பாதுகாக்கிறார்கள் என்ற உண்மை அவர்களை முதலாளித்துவ வர்க்கத்தினராக வகைப்படுத்துகிறது. இந்த கனவான்கள் கூடுதலாக தொழிலாளர்களின் மீதான தாக்குதல்களில் இருந்து முதலாளித்துவ வர்க்கத்தின் வருமானத்தை பாதுகாக்க வேண்டுமா; வேலைநிறுத்தங்களுக்கு எதிராக, ஊதிய உயர்வுக்கு எதிராக, வேலைவாய்ப்பற்றவர்களுக்கு உதவி செய்வதற்கு எதிராக அவர்கள் போராட்டத்தை நடத்த வேண்டுமா; அப்போது நாங்கள் கருங்காலிகளின் அமைப்பைத்தான் கொண்டிருப்போம், தொழிற்சங்கம் அல்ல. [“தொழிலாளர் வர்க்கத்தின் அரசோ அல்லது முதலாளித்துவ வர்க்கத்தின் அரசோ அல்ல”]

25. ட்ரொட்ஸ்கியின் அளவுகோல்களைப் பயன்படுத்தி, பிரதான தேசிய தொழிற்சங்க அமைப்புக்களும் மற்றும் கூட்டமைப்புகளும் வார்த்தையின் மிகவும் நேரடியான அர்த்தத்தில் கூட ,”கருங்காலி” அமைப்புகளாக செயல்படுகின்றன. அனைத்துலகக் குழுவின் பிரிவுகளின் பணியானது, தொழிற்சங்க அதிகாரத்துவங்களுக்கு எதிராக சாமானியர்களின் ஒரு முழு அளவிலான கிளர்ச்சியைத் தயாரிப்பதில் தொழிலாள வர்க்கத்திற்கு உதவுவதும், தொழிற்சாலைகள் மற்றும் பணியிடங்களில் போர்க்குணமிக்க சாமானிய அமைப்புகளிற்கு அனைத்து முடிவெடுக்கும் அதிகாரமும்

மாற்றப்படும் புதிய வடிவங்களை அபிவிருத்தி செய்வதும் ஆகும். இந்த அணுகுமுறை இடைமருவு வேலைத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டது, அதில் ட்ரொட்ஸ்கி நான்காம் அகிலத்தின் காரியாளர்களை "முதலாளித்துவ சமூகத்திற்கு எதிரான வெகுஜன போராட்டத்தின் பணிகளுக்கு மிகவும் நெருக்கமாக தொடர்புடைய சுயாதீனமான போர்க்குணமிக்க அமைப்புக்களை சாத்தியமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் உருவாக்க வேண்டும்; தேவைப்பட்டால், தொழிற்சங்கங்களின் பழமைவாத இயந்திரத்துடன் ஒரு நேரடி உடைவை எதிர்கொண்டாலும் கூட பின்வாங்கக்கூடாது" என்று குறிப்பிட்டார்.

26. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு, தொழிலாளர்களாலேயே கட்டுப்படுத்தப்படும் அமைப்புக்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் தொழிற்சங்க இயந்திரத்தின் கட்டுப்பாடுகளில் இருந்து தொழிலாளர்களை விடுவிக்க போராடி வருகிறது. 2021 ஏப்ரலில் சாமானிய குழுக்களின் சர்வதேச தொழிலாளர் கூட்டணிக்கான (IWA-RFC) முன்முயற்சியைத் தொடங்கியபோது, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு, "தொழிலாள வர்க்கத்தை மோதலிடும் பிரிவுகளாகப் பிளவுபடுத்துவதற்கு முதலாளித்துவ அரசாங்கங்கள் மற்றும் எண்ணற்ற வடிவிலான தேசிய, இன மற்றும் இனப் பேரினவாதம் மற்றும் அடையாள அரசியலின் பிற்போக்கு முன்மொழிவாளர்களின் ஒவ்வொரு முயற்சியையும் எதிர்த்து, ஒரு பொதுவான உலகளாவிய போராட்டத்தில் தொழிலாளர்களை ஐக்கியப்படுத்த பாடுபடும்" என்று விளக்கியது.

> இயற்கையாகவே, தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் நிலைமைகள் பிராந்தியத்திற்கு பிராந்தியம், நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றன, மேலும் இவைகள் தந்திரோபாயங்களின் தேர்வில் செல்வாக்கு செலுத்தலாம். ஆனால் எல்லா நாடுகளிலும், தற்போதுள்ள அதிகாரத்துவ தொழிற்சங்கங்கள், வளர்ந்து வரும் மக்கள் எதிர்ப்பிற்கு எதிராக ஆளும் உயரடுக்கின் மற்றும் அவற்றின் அரசாங்கங்களின் பெருநிறுவன மற்றும் நிதிய நலன்களைப் பாதுகாக்க உறுதிபூண்டுள்ள ஒரு நிறுவனமயமாக்கப்பட்ட பொலிஸ் படையாக செயல்படுகின்றன என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

27. தொழிற்சங்க அதிகாரத்துவம் சாமானியர்கள் மத்தியில் சோசலிச செல்வாக்கை அபிவிருத்தி செய்வதைத் தடுக்க தேவையான எந்த வழியையும் கையாளும். ஆனால் அதன் வளங்கள் இருந்தபோதிலும், முதலாளித்துவ அரசு மற்றும் போலி-இடதுகளின் ஆதரவால் பெருக்கப்பட்ட போதிலும், அது தோற்கடிக்க முடியாதது அல்ல. அமெரிக்காவிற்குள்ளும் சர்வதேச அளவிலும் தொழிலாள வர்க்கத்தின் வளர்ந்து வரும் போர்க்குணம் முதலாளித்துவத்தின் புறநிலை நெருக்கடியால் உந்தப்பட்டு வருகிறது. தொழிலாள வர்க்கப் போராட்டங்களில் செயலூக்கத்துடன் பங்கெடுப்பதும், முதலாளித்துவத்தை தூக்கியெறிவதையும் உலகளவில் தொழிலாளர்களின் அதிகாரத்தை ஸ்தாபிப்பதையும் நோக்கமாகக் கொண்ட முற்றிலும் நனவுடன் இயக்கப்படும் ஒரு முழுமையான சோசலிச முன்னோக்குடன் போர்க்குண உணர்வை ஊட்டுவதே கட்சி எதிர்கொள்ளும் பணியாகும்.

28. நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, உலக சோசலிச வலைத் தளத்தின் புத்தாண்டு அறிக்கையானது ஜனவரி 3, 2020 அன்று "சோசலிசப் புரட்சியின் தசாப்தம் தொடங்குகிறது" என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்பட்டது. உலக நிலைமை குறித்த இந்த மதிப்பீடு நடுத்தர வர்க்க போலி-இடது அமைப்புகளின் அரசியல் திவாலானவர்களுக்கு ஒரு நல்ல சிரிப்பைத்தான் ஏற்படுத்தியது என்பதில் சந்தேகமில்லை. முதலாளித்துவ மேலாதிக்கத்தை விட, குறிப்பாக அதன் வட அமெரிக்க கோட்டைக்குள் வெல்ல முடியாதது எதுவும் அவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் 2020 களில் ஒரு புரட்சிகர நெருக்கடியின் தொடக்கத்தை நினைத்துக்கூடப் பார்க்க முடியாது என்று கருதியது மட்டுமல்லாமல் , இருபத்தோராம் நூற்றாண்டின் எஞ்சிய 76 ஆண்டுகளில் ஒரு சோசலிசப் புரட்சியை அவர்களால் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை. ட்ரொட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டை நிராகரிக்கும் போலி-இடதுகளின் அரசியல் நடைமுறையானது, முதலாளித்துவத்தின் நிரந்தரத்தன்மையில் அசைக்க முடியாத நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

29. ஆனால் ஜனவரி 2020 முதல் நடந்தவைகள் அனைத்தும் அனைத்துலகக் குழுவின் அரசியல் முன்கணிப்புகளை உறுதிப்படுத்தியுள்ளன. புதிய தசாப்தத்தின் முதல் மாதம் முடிவதற்குள், கோவிட்-19 உலகம் முழுவதும் பரவியது. இந்த

அறிக்கை வெளியிடப்பட்டு சரியாக ஒரு வருடம் கழித்து, அரசியலமைப்பை தூக்கியெறிந்து ஒரு பாசிச சர்வாதிகாரத்தை ஸ்தாபிக்க ட்ரம்ப் மற்றும் அவரது கும்பலால் ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. மூன்று மற்றும் நான்கு ஆண்டுகள் தீவிரமடைந்து வரும் போர் மற்றும் தொழிலாள வர்க்கத்தின் பெருகிய சமூக எதிர்ப்பால் மேலாதிக்கம் செலுத்தப்பட்டுள்ளன.

30. உலக முதலாளித்துவத்தின் நெருக்கடி தணியும் என்றும் அதன் அறிகுறிகள் ஒரு குறுகிய கால காய்ச்சல் போல குறையும் என்றும் நம்புவதற்கு எந்த காரணமும் இல்லை. மாறாக, நெருக்கடி தீவிரமடைந்து, தொழிலாள வர்க்கத்தின் பூகோளரீதியான எதிர்ப்பும் மேலும் உறுதியான மற்றும் அரசியல் நனவுடன் வளர்ச்சியடையும். பிந்தைய நிகழ்முறையில், அனைத்துலகக் குழுவின் பாத்திரம் ஒரு தீர்க்கமான பண்பை எடுக்கும்.

32. இது வீண் தற்பெருமை அல்ல. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு ஒரு வரலாற்றுக் கட்சியாகும். அதன் தத்துவார்த்த, அரசியல் மற்றும் நடைமுறை வேலைகள் ஏகாதிபத்திய சகாப்தத்தில் புரட்சிகர போராட்டத்தின் பரந்த அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டவை என்பதோடு, இது ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக நீடிக்கிறது. இது மட்டுமே மார்க்சிசத்தின் தொடர்ச்சியை பிரதிநிதித்துவப்படுத்துகிறது, ஏனெனில் ஸ்ராலினிசம், சமூக ஜனநாயகம், பப்லோவாத திருத்தல்வாதம், முதலாளித்துவ தேசியவாதம், மற்றும் ஒவ்வொரு பிற்போக்குத்தனமான வகையறா குட்டி-முதலாளித்துவ தீவிரவாதம் ஆகியவற்றிற்கு எதிராக, அது 1923ல் ஸ்தாபிக்கப்பட்டதில் இருந்து ட்ரொட்ஸ்கிச இயக்கத்தால் பாதுகாக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

33. அனைத்துலகக் குழுவானது தொழிலாள வர்க்கம் எதிர்கொள்ளும் ஆபத்துக்களையோ அல்லது புரட்சிகர முன்னணிப்படை எதிர்கொள்ளும் சவாலின் மாபெரும் அளவையோ குறைத்து மதிப்பிடவில்லை. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு இன்னும் ஒரு வெகுஜன இயக்கத்தை வழிநடத்தவில்லை. அது நிகழ்வதற்கு தொழிலாள வர்க்கத்தின் வெகுஜனப் போராட்டங்களில் ஒரு அபிவிருத்தி தேவைப்படுகிறது. எவ்வாறெனினும், தொழிலாளர்கள் மத்தியில் மார்க்சிச செல்வாக்கின் வளர்ச்சியானது, ஐக்கிய வாகனத் தொழிலாளர்களின் தலைவர் பதவிக்கு வில் லேமனின் சமீபத்திய பிரச்சாரத்தில் முன்னறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு

சோசலிஷ்டாக பகிரங்கமாக பிரச்சாரம் செய்து, சாமானிய குழுக்களின் சர்வதேச தொழிலாளர் கூட்டணியின் வேலைத்திட்டத்திற்காக வாதாடிய லேஹ்மன் கிட்டத்தட்ட 5,000ம் வாகனத்துறை தொழிலாளர்களின் வாக்குகளைப் பெற்றார். UAW தொழிற்சங்க அதிகாரத்துவம் தேர்தல் பற்றி தொழிலாளர்களுக்குத் தெரிவிக்காததாலும், அதன் உறுப்பினர்களில் 10 சதவீதத்திற்கும் குறைவானவர்களையே வாக்களிப்பதை மட்டுப்படுத்தியிருந்த போதிலும், இந்த சாதனை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது.

34. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் காரியாளர்களின் கணிசமான வளர்ச்சிக்கும், புதிய பிரிவுகளைக் கட்டியெழுப்புவதற்கும் அஸ்திவாரம் போடப்பட்டுள்ளது. உலக சோசலிச வலைத் தளமானது, கால் நூற்றாண்டு தொடர்ச்சியான தினசரி வெளியீட்டின் போக்கில், ஒரு மிகப்பெரும் சர்வதேச வாசகர்களை ஸ்தாபித்துள்ளது. இடைவிடாத தணிக்கைகள் இருந்தபோதிலும், உலக சோசலிச வலைத் தளம் ஒவ்வொரு நாளும் பல்லாயிரக்கணக்கானவர்களால் வாசிக்கப்படுகிறது, சர்வதேச தொழிலாள வர்க்கத்திலும் மாணவர் இளைஞர்கள் மத்தியிலும் அதனுடைய செல்வாக்கு சீராக வளர்ந்து வருகிறது.

35. மேலும் ட்ரொட்ஸ்கிச இயக்கத்தின் பணியானது ஒரு அரசியல் வெற்றிடத்தில் நடைபெறவில்லை. உலக நெருக்கடியானது நூற்றுக்கணக்கான மில்லியன் மக்களை தீவிரப்படுத்தி வருகிறது. வெகுஜனங்களின் அடிப்படை நலன்களுக்கும் ஆளும் வர்க்கத்தின் சலுகைகளுக்கும் இடையிலான பிளவு முன்னெப்போதையும் விட வெளிப்படையாகி வருகிறது. போர், இனப்படுகொலை, பெருந்தொற்று நோய் மற்றும் பாசிசம் ஆகியவற்றின் ஏகாதிபத்தியத்தின் இயல்பாக்கலானது, வெகுஜன நனவை புரட்சிகரமாக்குவதற்கும், தொழிலாள வர்க்கத்தின் அரசியல் கண்ணோட்டத்தில் சோசலிசத்தை இயல்பாக்குவதற்கும் ஒரு சக்திவாய்ந்த உந்துதலை வழங்கும்.

36. உலக சோசலிச வலைத் தளத்தின் அனைத்து வாசகர்களையும் இந்த முன்னோக்கிலிருந்து வரும் தவிர்க்க முடியாத முடிவுக்கு வருமாறு நாங்கள் அழைப்பு விடுக்கின்றோம். காட்டுமிராண்டித்தனத்தில் இறங்குவதை நிறுத்து! சர்வாதிகாரம், சமத்துவமின்மை மற்றும் போருக்கு எதிராக தொழிலாள

வர்க்கத்தின் சக்தியை அணிதிரட்டுவோம்! இருபத்தியோராம் நூற்றாண்டின் மார்க்சியமான ட்ரொட்ஸ்கிசத்திற்கான போராட்டத்தை மேற்கொள்ளுவோம்! சோசலிச சமத்துவக் கட்சியில் சேர்ந்து சோசலிசப் புரட்சிக்கான உலகக் கட்சியைக் கட்டியெழுப்புவோம்!

தொடர்புகளுக்கு:
**https://www.wsws.org/ta/special/pages/contact.html**